விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ══ Valampurii ══

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 28 ஞாயிற்றுக்கிழமை (14.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சரணடைந்த புலி உறுப்பினர்கள் இரகசிய தடுப்பு முகாம்களில்!

## சம்பவத்தை விசாரிக்க ஆணைக்குழு இணக்கம்

(கரவெட்டி)

வன்னி இறுதி யுத்தத்தின் பின் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்து சரணடைந்தவர்களை இராணுவம் இரகசிய தடுப்பு முகாம்களிலும் வைத்துள்ளது என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் பொதுமக்கள் சாட்சியமளித்தனர். இக் கருத்தை ஏற்றுக் கொண்ட ஆணைக் குழுவின் தலைவர் சி. ஆர். டி. சில்வா, பதிவு செய்யபடாத தடுப்பு முகாங்களிலும் தாம் விசாரணைகளை மேற்கொள்வோம் எனப் பதிலளித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் சம்பளம் மற்றும் வரிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின் போது அரச சேவையாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவது குறித்து அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்ததன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதியான 2 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பில் பாதி தான் வழங்கப்படும் என்றும் 2011ஆம் ஆண்டுக்கு ஆயிரத்து 300 ரூபாய் மற்றும் 2012 ஆம் ஆண்டுக்கு ஆயிரத்து 200 என்ற அடிப்படையில் இரண்டு கட்டங்களாகவே அந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்றும் தெரிய வருகின்றது.

அதற்கு மேலதிகமாக அண்மைக்காலமாக பெருந்தொகை சம்பள அதிகரிப்பு குறித்த அரசாங்கத்தின்

(20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் அழைத்துச் சென்ற எனது தாயார் எங்கே?



### சாட்சியத்தில் சிறுமி கேள்வி!

(யாழ்ப்பாணம்)

வன்னி யுத்த நடவடிக்கையின் போது காணாமல் போன தனது தாயைக் கண்டுபிடித்து தருமாறு 13 வயதான சிறுமி ஒருவர் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழு முன் வாக்குமூலமளித்துள்ளார். செல்வதாசன் இலக்கியா என்ற 13 வயது சிறுமியே தனது தாயைக் கண்டுப்பிடித்து தருமாறு கோரியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது தனது தந்தையான செல்வதாசன் ஷெல் தாக்குதலில் உயிர் இழந்தார். எனது தாயார் செல்வதாசன் சுகந்தி தோளில் காயமடைந்தார்

இந் நிலையில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளை பார்வையிட முடியுமாயின் குடியமர ஏன் அனுமதிக்க முடியாது

### மருதங்கேணி மக்கள் சுட்டிக்காட்டு

(மருதங்கேணி)

வீடுகளுக்குச் சென்று பார்வையிடவும் ஆலயங்களுக்குச் சென்று வழிபடவும் அனுமதித்த இராணுவம் அங்கு மீள்குடியமர்வதற்கு மட்டும் கண்ணிவெடி உள்ளதாக கூறுவதற்கு காரணம் என்ன? என வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி மக்கள் கற்றுக்

(19ஆம் பக்கம் பார்க்க)



## ஆங் சான் சுகி விடுதலையானார்



(கொழும்பு)

மியன்மாரில் 15 வருட காலம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சி அரசியல் தலைவியான ஆங் சான் சுகி அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயகத்தை வலியுறுத்தி போராட்டங்களை மேற்கொண்ட ஆங் சான் சுகி 1989ஆம் ஆண்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். 65 வயதான அவர் கடந்த 21 வருடகாலத்தில் 15 வருட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி அரச காணிகளை கைப்பற்றும் யாழ்.மக்கள்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளை யாழ்ப்பாண மக்களும் நேற்றுக் கைப்பற்றிக் கொண்டனர்.

நாவற்குழியில் உள்ள அரச காணிகளில் சுமார் 70 சிங்கள குடும்பங்கள் கடந்த 10 ஆம் திகதி இரவோடு இரவாக குடியேறினர். இது பல்வேறு மட்டத்திலும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது.

இந் நிலையில் நேற்று அப்பகுதிக்குச் சென்ற சாவகச்சேரி மற்றும் குருநகர் வாசிகள் எஞ்சிய நிலப்பரப்புக்களையும் கைப்பற்றினர். இதனால் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

எனினும் சிங்கள மக்கள் பிடித்த நிலப்பரப்புக்களை தவிர மற்றைய நிலங்களை யாழ். வாசிகள்

(20ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு

SLMO



SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆகக்கூடிய வயதினையுடைய வயோதிபர் நலன்புரி முகாமில்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் அதிகூடிய வயதுடைய வயோதிபர் ஒருவர் இராமாவில் நலன்புரி முகாமில் வசித்துவருகிறார்.

முள்ளியான் பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த அர்மானிஸ் அந்தோனிப்பிள்ளை என்ற 113 வயதுடைய வயோதிபரே நலன்புரி முகாமில் வசித்து வருகிறார்.

10.02.1897 ஆம் ஆண்டு பிறந்த இவர் யுத்தத்தின் காரணமாக பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்து கடைசியில் இராமாவில் முகாமில் தஞ்சமடைந்துள்ளார். (ச-5)

# அம்மா பகவான் நன்றிகள் தினம்

ஸ்ரீ அம்மா பகவான் நன்றிகள் தினம் மற்றும் வரதீட்சை மாலை விரதாரம்பம், வித்யா மாலை விரத பூசை நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரியில் இடம்பெறும். இதில் அம்மா பகவானின் அருளைப் பெற அனைவரையும் வருகை தருமாறு அறவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் கல்லூரியின் பழைய மாணவர்கள் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் ஒன்றுகூடி இன்று பி.ப. 2.00 மணிக்கு கலை நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் விளையாட்டு வீரர் மோகன்ராமும் சிறப்புவிருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-7)

# செய்தி சேகரிக்க பி.பி.சிக்கு அனுமதி

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளின் போது செய்தி சேகரிப்பதற்கு பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகள் தொடர்பாக செய்தி சேகரிப்பதற்கு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு கடந்த புதன்கிழமை பாதுகாப்பு அமைச்சு மறுத்திருந்தது. ஆனால் இப்போது இந்த ஆணைக்குழுவின் விசாரணை எங்கு நடந்தாலும் பி.பி.சி. செய்தி சேகரிக்கச் செல்லலாம் என இலங்கை ஜனாதிபதி பி.பி.சி.க்கு அறிவித்துள்ளார் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## Visiting Classes

1) தரம் 7 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்பு
2) தரம் 3-7 மாணவர்களுக்கான ஆங்கில வகுப்பு
3) தரம் 4 - O/L மாணவர்களுக்கான கணித வகுப்பு
4) O/L மாணவர்களுக்கான வர்த்தகமும் கணக்கியல் வகுப்புகள்

மேலதிக விபரங்களுக்கு :
V.S.G, No.70(100), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 0772367479

(2865)

## வாடகைக்கு

அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களுக்கு உகந்த அலுவலகம் களஞ்சியத்துடன் கூடிய இரண்டு மாடிக் கட்டிடம் கே.கே.எஸ். வீதியில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :
0777150931

(2849)


# தம்மை விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பல ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அரசு தம்மை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் அரசிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளை அரசு கட்டம் கட்டமாக விடுவிப்பது போல தம்மையும் விடுவிக்க வேண்டும் என்று இலங்கை சிறை ஒன்றில் கடந்த 17 ஆண்டுகளாக அரசியல் கைதியாக இருக்கும் ஒருவர் கூறினார். இலங்கையில் 650 தமிழ் அரசியல் கைதிகள் பல ஆண்டுகளாக சிறையில் இருப்பதாக கூறப்படுகிறது. (ச-5)


## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையில் மாடி வீடொன்று விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு :
0215680323

(2859)

செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30


# யாழ். பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு நாளை திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இணக்கப்பாட்டுக்கும் மறு அபிவிருத்திக்குமான அறிவு என்றதலைப்பில் நடைபெறும் இம் மாநாட்டில் வரவேற்புரையைநிகழ்வின் இணைப்பாளரும் யாழ்.பல்கலைக்கழக கணக்கியல்துறை தலைவருமான பேராசிரியர் ரி.வேல்நம்பி நிகழ்த்துவார்.

ஆரம்ப உரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் தொடர்ந்து வவுனியா வளாக முதல்வர் ஆர்.நந்தகுமார் உரை நிகழ்த்துவார்.

நிகழ்வின் பிரதான கருத்துரைகளை இந்திய சாய்ராம் முகாமைத்துவ கல்வி நிறுவன இயக்குநர் பேராசிரியர் கே. மாறன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் ஆகியோர்நிகழ்த்துவர்.

தொடர்ந்து 10.30 மணிக்கு மாநாட்டு ஆய்வு அரங்கங்கள் 6 இடங்களில் நடைபெறும். இதில் கலைப்பீட புதிய கட்டிடத் தொகுதியில் 4 அரங்கங்களும் முகாமைத்துவத் துறை மண்டபம், பௌதிகவியல் துறை மண்டபம் ஆகியவற்றில் தலா ஒரு அரங்குகளும்இடம்பெறும்.

இவ் ஆய்வரங்கில் 126 ஆய்வுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் இதில் கலந்து கொள்வதற்காக இந்தியா, கானா மற்றும் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம் மாநாட்டில் கல்விசார், கல்வி சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம்என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மரண அறிவித்தல்

## அப்புலிங்கம் பரிமளம்



எம்.எஸ்.வீதி கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புலிங்கம் பரிமளம் (குஞ்சு) 11.11.2010 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான சின்னப்பு பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் முருகேசு முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் அப்புலிங்கத்தின் அன்பு மனைவியும்,

விஸ்வலிங்கம், சண்முகராசா, செல்வராணி, தங்கராணி, தங்கராசாவின் அன்புச் சகோதரியும் திருநாமம், அப்புத்துரை, பூமணி ஆகியோரின் மைத்துனியும் கணேஷராசா, தவராசா, மகேந்திரராசா, குமாரராசா, கிருஷ்ணராசா, நளாயினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவானி, ரேணுகா, மலர், குமுதா, ராஜி ஆகியோரின் மாமியாரும் லக்சன், தனுஷ், லது, லதி, லக்சா, இந்துஷன், சிந்துஷன், நக்சனா, தக்ஷிகன், சிந்துஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 14.11.2010 (இன்று) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டைஆலடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எம்.எஸ்.வீதி,
கோண்டாவில்.

(2844)

தகவல் :
குடும்பத்தினர்
0774047774


## SAKTHIMICRO SYSTEM

Sankaththanai, Chavakachcheri, 0212270084

இலங்கையில் முதல் முறையாக
கணனி உலகில் மிகப் பிரமாண்ட நிறுவனமான Adobe (USA) இன் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரே ஒரு பயிற்சி நிறுவனம்.

Adobe AUTHORISED Training Centre - USA

புதிய பிரிவுகள் ஆரம்பம்........
Adobe Premiere Pro CS5, Adobe Photoshop CS5
Advanced MultiMedia, Advanced Maya, Video Editing
Office, Internet, Hardware, ICT
உலகத்தரத்திலான கணனி சான்றிதழ்

அதிரடி மலிவு விற்பனை 14,15

| | |
|---|---|
| Intel Dual Core 2.8 | 8050/= |
| Biostar 31 | 5300/= |
| DVD Writer | 2750/= |
| 1GB DDR2 RAM | 2850/= |
| 2GB DDR3 RAM | 5150/= |
| Hard Disk 500GB | 5550= |
| Hard Disk 320GB | 5150/= |
| 4GB Flash | 1300/= |
| Keyboard, Speaker | 400/= |
| Optical Mouse | 270/= |
| headset (with mic) | 300/= |
| Web camera | 1100/= |
| UPS | 4150/= |
| VGA card ATI 1GB | 9500/= |
| M card reader | 300/= |
| microlab woofer 5.1 | 6250/= |

Home +
Processor - Dual Core - 2.8Ghz
Motherboard - Core 2 Support.
RAM - 1GB
VGA - 128Share
HardDisk - 320GB
DVD Writer
Monitor - 15.5" LCD
Multi Media Keyboard
Optical Mouse
3year warranty.
41,400 /=

Adobe SOLUTION PARTNER Bronze
Adobe AUTHORISED Training Centre

சக்திமைக்றோ சிஸ்ரம்
www.sakthizone.com, info@sakthizone.com, 0776102609

## சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், நீரிழிவு, சிறுநீரக அழற்சி, ஆதகவலி, பாலியல் குறைபாடு, அதி இரத்தமுக்கம், நெஞ்சுக்குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற்பருமன், மெலிவு, சோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை, குளோகோமா, இளநரை, பொடுகு முதலான நோய்களுக்கு பேரறிஞர் Dr.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை 16,17,18 ம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசி தொடர்புக்கு :
0777047371
0757390195
0771005971

Dr.K.சிவானந்தன்
வங்கி ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(2858)

## வேலை ஆட்கள் தேவை

* விற்பனையாளர்
* கணக்காளர்
* சிட்டை எழுதுனர்
* கணனி அனுபவம் உள்ளவர்கள்
* போன் திருத்துனர்

15.11.2010 திங்கள் 10 மணிக்கு நேரில் வரவும் (இருபாலாரும்)
T.P : 0773611282
இல. 09, நவீன சந்தை வெளிப்புறம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(2853)

# தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தால் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு நிதியுதவி

## அதன் தலைவர் தெரிவிப்பு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் நோக்கோடு தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தினாலும் அபிவிருத்தி நடவடிக்கைக்கு நிதி வழங்கப்படவுள்ளதாக நிதியத்தின் தலைவர் ஏ. குடவத்தே தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் அண்மையில் மார்ட்டின் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த சூழ் நிலையில் நாம் அனைவரும் இன வேறுபாடுகளை மறந்து சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்.

இன்றைய தினம் தொழிலாளர்கள், சுயதொழில் செய்வோர் அனைவருக்கும் தமது தேவைகளை வெளிக்கொணரும் நன்மை தரும் நாளாக அமைந்துள்ளது.

தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தில் தற்போது 88 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

இவர்கள் மூலம் நாட்டு மக்களின் தேவைகள் மிகவிரைவில் பூர்த்தியாக்கப்படும்.

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு எமது நிறுவனம் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2-6)

# ஒளிவிழா நிகழ்வுகள்

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் த.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமக் கல்வி வலய ஆரம்ப கல்வி முத ன்மை ஆசிரியர் திருமதி தே. தயாபரராஜா, சிறப்பு விருந்தினராக சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் பூமாதேவி மகாதேவா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ச-7)

# சமுர்த்தி கெக்குழு தேசிய மட்ட போட்டிகளில் 12 பேர் வெற்றி

சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி கெக்குழு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய தேசிய மட்டப் போட்டிகளில் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த பன்னிரண்டு மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

அகில இலங்கை தேசிய ரீதியாக வெற்றியீட்டிய பன்னிரண்டு மாணவர்களுள் ஆறு பேர் முதலாமிடத்தையும் ஒருவர் இரண்டாம் இடத்தினையும் நான்கு பேர் மூன்றாம் இடத்தினையும் ஒருவர் நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர். இவர்களின் விபரம் வருமாறு,

**தனி நபர் பாடல் (ஆரம்பப் பிரிவு)**

செல்வி ஆ. அமிர்தா (காரைநகர் பிரதேச செயலர் பிரிவு முதலாம் இடம்),

**தனி நபர் பாடல் (இடை நிலைப் பிரிவு)**

செல்வன் ந. கபில்ராஜ், (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு 2 ஆம் இடம்),

**தனி நபர் பாடல் (மேற் பிரிவு)**

செல்வி உ.உஷானா (சங்கானை பிரதேச செயலர் பிரிவு 3 ஆம் இடம்)

**குழு நடனம் (ஆரம்பப் பிரிவு)**

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு சிறுவர் குழு மூன்றாம் இடம்

**அறிவிப்பாளர் போட்டி (ஆரம்பப்பிரிவு)**

செல்வி. பி.அனுஜா (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு முதலாம் இடம்)

**அறிவிப்பாளர் (போட்டி மேற்பிரிவு)**

செல்வி ஏ.இ. அனிக்ஸ்மாலா (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முதலாம் இடம்)

**தனி நபர் நடனம் (இடை நிலைப்பிரிவு)**

செல்வி. இ. தேவிகா (சங்கானை பிரதேச செயலர் பிரிவு, முதலாமிடம்)

**தனிநபர் நடனம் (மேற்பிரிவு)**

செல்வி ஏ.இ. அனிக்ஸ்மாலா (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு 3 ஆம் இடம்)

**பேச்சு (ஆரம்பப் பிரிவு)**

பி. கேதுஷா (சங்காணை பிரதேச செயலர் பிரிவு 3 ஆம் இடம்)

**பேச்சு (இடைநிலைப் பிரிவு)**

செல்வி. ல.டினோஜா (காரைநகர் பிரதேச செயலகம் மூன்றாம் இடம்)

**பேச்சு (மேற்பிரிவு)**

செல்வி சி. லோகவதனி (காரைநகர் பிரதேச செயலர் பிரிவு 4 ஆம் இடம்)

**குறுநாடகம்**

சிறுவர் குழு சங்கானை பிரதேச செயலகம் முதலாம் இடம்.

(ஸ்ரீ-246)

# வாரம் ஒரு தகவல்

## மாடும் மனிதனும்

"அண்ணே! இன்னமும் சரியாக பொழுது விடியவில்லை. அதற்குள் இங்கு வந்து என்ன செய்கிறீர்கள்?"

"அது வந்து... சும்மா இந்தக் கோயில் பக்கமாக வந்தேன். இந்தப் பசுமாடு இங்கே தனியாக நின்று கொண்டிருந்தது. சொந்தக்காரர்கள் யாரையும் காணவில்லை. அதுதான் பால் கறந்து கொண்டு போகலாம் என்று பார்க்கிறேன்"

"மாடுகளில் இனிமேல் பால் கறக்க வேண்டிய அவசியமில்லை"

"என்ன சொல்றீங்க?"

"மனித இயந்திரம்... அதுதான் ரோபோ. இனிமேல் அந்தக் காரியத்தைச் செய்து விடும்"

"ஆச்சரியமாக இருக்கிறதே?"

"டச்சு நாட்டு விஞ்ஞானி ஒருத்தர் கம்பியூட்டர் மூலமாக இயங்கக் கூடிய ஒரு ரோபோவை உருவாக்கியிருக்கிறாராம்"

"அப்படியா?"

"ஆமாம்! நெதர்லாந்து நாட்டில் பால் பண்ணைகள் அதிகம். அங்கே காலையில் அந்த இயந்திரம் வரிசையாக நிற்கும் மாடுகளில் பால் கறந்து சேமிக்க வேண்டிய இடத்தில் சேமித்தும் வைத்துவிடும். மாடுகளின் கழுத்தில் அடையாள 'சிப்'புகள் தொங்கும். அது கம்பியூட்டரில் இணைக்கப்பட்டிருக்கும். ஒரு மாடு எந்த நேரத்தில் அதிகமாக பால் கறக்கும் என்ற விபரத்தைக் கம்பியூட்டர் தெரிவிக்கும். உடனே அந்த இயந்திரம் போய்ப் பாலைக் கறந்துவிடும்.

"அண்ணே! தெரியாமல்தான் கேட்கிறேன். இந்த விபரமெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்?"

"பால் கறப்பதற்குத்தான் இயந்திரம் வந்திருக்கிறதே தவிர பால் கொடுப்பதற்கு இன்னும் இயந்திரம் வரவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்வதற்காகத் தான்..."

"என்ன சொல்கிறீர்கள்?"

"இது நிஜமான பசுமாடு இல்லையப்பா... சிலை"

"நீங்க...?"

"நான் தான் இதைச் செய்து கொண்டிருக்கிறேன். வால் பக்கம் தான் கொஞ்சம் வேலை பாக்கியிருந்தது. அதற்காகத்தான் வந்தேன்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

*14.11.2010*
*(ஐப்பசி 28, ஞாயிற்றுக்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 1.13 மணிவரை*
*அவிட்டம் முன்னிரவு 7.20 மணிவரை*
*இராகுகாலம் 4.37-6.07 மணிவரை*
*சுபநேரம் 9.07-10.37 மணிவரை*
*அட்டமி - நவமி*

**மேடம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உதவும், பெருமைப்பட வேண்டிய நாள், உறவினர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**இடபம்** நண்பர்கள் உதவியால் நலம் பெறுவீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான செய்தியொன்று வந்து சேரும், பொருட் சேர்க்கையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பார்கள், பிரயாண நன்மையுண்டு.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க பிறரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயந்த சுபாவம், பிரயாணத்தில் கவனம் தேவை, பணப்பற்றாக்குறையுண்டு, தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**சிங்கம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், நீண்ட கால நண்பர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, பொருளாதாரம் திருப்திகரமாக அமையும், இறை வழிபாட்டால்இன்பம்அதிகரிக்கும்நாள்.

**கன்னி** கூட்டு முயற்சி வெற்றி பெறும், எதிர்பார்த்த சலுகைகள்இயல்பாகவே வந்து சேரும், உடல் நலம் ஆரோக்கியமாக காணப்படும், எதிரிகள் ஆதரவாக நடந்து கொள்வர்.

**துலாம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பூமியால் இலாபம் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், வருங்கால நலன்கருதி எடுத்த காரியம் வெற்றி பெறும், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு, சுப காரியச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு** தெய்வானுகூலத்தால் சிறப்புகள் வந்து சேரும் நாள், உறவினர் அனுசரணையாக நடந்து கொள்வர், எடுத்த கருமங்கள் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மகரம்** புதிய திருப்பம் ஏற்படலாம், பண வருவாய் திருப்திகரமாக அமையும், சொன்ன வார்த்தையை காப்பாற்றி மகிழ்வீர்கள், திருமணப் பேச்சு சாதகமாக அமையலாம்.

**கும்பம்** சிந்தனை மிகுதியுண்டு, உறவினர் வருகையால் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கூடிய கவனம் எடுப்பீர்கள், வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள்.


**மீனம்** காரிய அலைச்சல் ஏற்படலாம், சிலரின் பாச வலைக்கு ஆட்பட நேரிடலாம், தூரதேசச் செய்தி ஆச்சரியப்பட வைக்கும், தொழிலில் சிறுமாற்றம் செய்ய வேண்டியயேற்படலாம்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 50 |
| தக்காளி | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 |
| கோவா | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 80 | 40 |
| பூசணி | 40 | 60 | 40 |
| புடோல் | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 | 110 |
| பாகற்காய் | 180 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 160 | 50 |
| கரணைக்கிழங்கு | 40 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 100 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 200 | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 160 |
| கத்தரி தம்புள்ள | 30 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 15-25 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-50 |







513 ஆவது படைப் பிரிவுடன் சிமிக்கும் மஞ்சியும் இணைந்து நடாத்திய மாபெரும் விளையாட்டுப் போட்டி நேற்று மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 513 ஆவது படைப்பிரிவின் உடுவில் பிரிவு பொறுப்பதிகாரி பி.பி.எஸ்.டி.சில்வா தேசியக் கொடியேற்றுவதையும் விளையாட்டு வீரர்களுக்கு கைலாகு வழங்குவதையும் அருகில் மஞ்சி பிஸ்கட் நிறுவன அதிகாரிகள் நிற்பதையும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றிய நவாலி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் சுன்னாகம் சாந்தி நியூ ஸ்டார் விளையாட்டுக் கழக அணிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-நவாலி செய்தியாளர்)

# பரு.நகரசபை அலுவலகம் மீண்டும் சொந்த இடத்தில்!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்குவதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது. இதனையடுத்து இவ்வலுவலகம் பழைய இடத்தில் விரைவில் இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் அலுவலகம் கடந்த 25 வருடங்களுக்கு மேல் சொந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் செயற்பட்டு வந்துள்ளது.

இது மீண்டும் பருத்தித்துறைப் பகுதியில் செயற்படவுள்ளது. இதன் முன்னோடியாக நாளை திங்கட்கிழமை நகர சபைக் காணிக்குள் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

தேக்கு, மகோகனி போன்ற மரக் கன்றுகள் நடப்படவுள்ளன.

இந்த அலுவலகம் தற்போது ஆத்தியடி பகுதியில் தற்காலிக வீடொன்றில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-10)

# மீள்குடியேறச் சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சுண்டி வலன்புர பகுதி மக்கள் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் தமது வீடுகளுக்கு குடியேறும் நோக்கில் நேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

தமது சொந்த வீதிகளில் குடியேறுவதற்காக தமது இருப்பிடங்களுக்குச் சென்று அங்கு சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட போதும் இராணுவத்தினர் மீளக்குடியேற அனுமதிக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக யாழ். மாநகர உதவி முதல்வர் து. இளங்கோ நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு வாகன வசதிகளை செய்து கொடுத்தார்.

நீண்டகாலமாக தமது சொந்த வீடுகளில் குடியேறும் ஆவலில் இருந்த மக்கள் தமது சொந்த வீடுகளில் மீள்குடியேறுவதற்கு முயற்சி எடுத்தும் ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-51)

# தேசிய மட்டத்தில் இரண்டாமிடம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்வி அமைச்சும் தேசிய நூலக ஆவணங்களாக்கல் சபையும் இணைந்து நடாத்திய கட்டுரைப் போட்டியில் யாழ்.மாணவி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்.கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி பயிலும் செல்வி ஜெயசிங்கம் தபோதினி என்ற மாணவியே தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றவராவார்.

இவருக்கான சான்றிதழ், காசோலை என்பன கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்டன. (ஸ்ரீ-7)

# பாடசாலைகளுக்கு முன்பாகவுள்ள வீதிகளில் பாதசாரிக் கடவைகள்

## மாணவர்களின் நலன் கருதி நடவடிக்கை

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி, இமையாணன் பகுதி வீதிகளில் மூன்று பாடசாலைகளுக்கு முன்பாக வீதியில் பாதசாரிக் கடவை வரையப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

பாடசாலை மாணவர்களினதும் பயணிகளினதும் போக்குவரத்து நலனைக் கருத்தில் கொண்டு இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டி வீதியில் தாமோதரம் வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் இமையாணன் வீதியிலுள்ள இமையாணன் அ.த.க.பாடசாலையிலும் இவ்வாறு பாதசாரிகள் கடவைகள் வரையப்படவுள்ளன. (ஸ்ரீ-10)

# அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தூதரக சிறப்புரிமைகளை இரத்துச் செய்ய தீர்மானம்

(கொழும்பு)


அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தூதரக சிறப்புரிமைகளை இரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கை உள் விவகாரங்களில் தலையிடும் சட்டவிரோத நடவடிக்கை காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் தலைவர்களிடம் விசாரணை நடத்தும் சந்தர்ப்பங்களில் அவர்கள் தமக்கு தூதரக சிறப்புரிமைகள் இருப்பதாகக் கூறி நாட்டில் இருந்து வெளியேறியுள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்கும் நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ்க் கொண்டு வந்த பின்னர் அரசசார்பற்ற நிறுவனங்களின் வெளிநாட்டு அதிகாரிகள் தொடர்பாக இலங்கை அரச புலனாய்வுப் பிரிவினர் முக்கிய கவனம் செலுத்தினர்.

அரசாங்கத்திற்கு பக்கசார்பாக செயல்படாத அந்த நிறுவனங்களின் வெளிநாட்டு அதிகாரிகள் சிலரை புலனாய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே அமைச்சு நாடு கடத்தியுள்ளது. (ஸ்ரீ-2)




# வடக்கில் வீசும் வசந்தம் என் குடும்பத்தில் வீசாதா?

வரணி வடக்கு J/339 கிராமசேவையாளர் பிரிவில் வசித்துவரும் நான் எமக்கென சொந்தவீடு இன்மையால் இம் மடலை தங்கள் நடுவுநிலைமை தவறாத பத்திரிகைக்கு அனுப்பி வைக்கிறேன்.

வீட்டுத்திட்ட பணிப்பாளருக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துவதாவது, கடந்த 2005ஆம் ஆண்டு சுமார் 100 வீடுகள் U.N.D.P. நிறுவனத்தால் வழங்கப்பட்டன. ஆனால் 2002இல் திருமணம் முடித்தவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கவேண்டாம் என கிராமசேவையாளருக்கு (J/339) அறிவித்தல் கிடைத்ததாகக் கூறப்பட்டது.

இதனால் எமக்கு வீட்டுத் திட்டம் நிறுத்தப்பட்டது.

2010 இற்கு உரிய வீட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பித்திருந்தும் வீட்டுத் திட்டப் பட்டியலில் எமது பெயர் சேர்க்கப்படவில்லை.

எனது கணவர் மனநிலை பாதிக்கப்பட்டவர். இதனால் தொழில் எதுவும் செய்யமுடியாது. மூன்றுபிள்ளைகளுடன் எனது குடும்பம் வறுமையில் வாடுகின்றது.

கிராமசேவையாளர் எனது கஷ்டநிலையினை உறுதிப்படுத்தியும் உரிய அதிகாரிகள் எனது கோரிக்கைக் கடிதங்களினை மானசீகமாக ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

எனவே எனது வறுமையான துன்பியல் வாழ்க்கையை ஆண்டவரிடம் முறையிடுவதை தவிர வேறு வழியில்லை. மனச்சாட்சி உள்ளவர்கள் மனக்கண் கொண்டு பாருங்கள்.

அ.புவனவதி, வரணி

# மிருகவதைக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

(கொழும்பு)

மிருகவதைக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார். மிருகவதைக்கு எதிரான அமைப்பினருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் மாடுகளை இறைச்சிக்காக எடுத்துச் செல்வோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதுடன் மீட்கப்படும் விலங்குகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் அதுரலிய ரத்னதேரர் உள்ளிட்ட சிலர் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர். அண்மைக்காலமாக இலங்கையில் மிருகவதை குறித்த சர்ச்சைகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



வல்வெட்டித்துறை மக்கள் வங்கியினால் வாடிக்கையாளர் கௌரவிப்பும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில்வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் நடைபெற்றது. இதில் வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு தண்டபாணிக தேசிகர் மங்கல விளக்கேற்றுவதையும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் அதிபர் க.தர்மலிங்கம் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினர் கே.சுசீந்திரன், கொற்றாவத்தை அ.மி.த.க.க பாடசாலையில் அதிகமானவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றதையிட்டு பாடசாலை அதிபர் ஆ. வெற்றிவேலுக்கு பரிசில் கொடுத்து கௌரவிப்பதையும் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமாணவிக்கு வல்லை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-வல்வெட்டித்துறைச் செய்தியாளர்)

# போதியளவு மிருக வைத்தியர்கள் உள்ளபோதும் சிங்களவர்கள் நியமனம்

## செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கில் அண்மையில் நியமிக்கப்பட்ட மிருக வைத்தியர்கள் அனைவரும் சிங்களவர்கள் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கில் தமிழ் மக்கள் செறிந்து வாழ் வதாகவும் மிருக வைத்தியர்கள் அனைவரும் சிங்களவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதனால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதியளவு தமிழ்மொழி மூல மிருக வைத்தியர்கள் இருக்கின்றபோதிலும் சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த சிங்கள மிருக வைத்தியர்கள் தமிழ் பண்ணையாளர்களுடன் தொடர்பாடுவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் இந்த நியமனங்கள் குறித்து அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# அல்ஜசீரா ஊடகவியலாளர்களுக்கு விசா வழங்க ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

அல்ஜசீரா செய்தியாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் விசா அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய விசா அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எந்தவிதமான காரணங்களும் குறிப்பிடாது அல்ஜசீரா செய்தி ஊடகவியலாளர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கான விசா முதலில் மறுக்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதியின் தலையீட்டினால் குறித்த ஊடகவியலாளர்களுக்கு இலங்கை குடிவரவு -குடியகல்வுத் திணைக்களம் விசா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவில் எழுத்துமூல சாட்சியங்களை வழங்கும் கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் எழுத்து மூல சாட்சியங்களை வழங்குவதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழுவிடம் எழுத்து மூல சாட்சியங்கள் மற்றும் யோசனைகளை ஒப்படைக்க முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது.

முன்கூட்டியே எழுத்து மூல சாட்சியங்களை வழங்குவதன் மூலம், இறுதி அறிக்கை தயாரிப்பதற்கு முன்னர் யோசனைத் திட்டங்களை விரிவாக ஆராய்ந்து அவற்றின் உட்கிடக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்க அவகாசம் கிட்டும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

எழுத்து மூலமாக சாட்சியமளித்தவர்கள் சிலருக்கு நேரடியாக தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு ஆணைக்குழு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் இயங்கிய ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் சாட்சியமளிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு கோரியுள்ளதாகவும் இவ்வாறானவர்களுக்கு முடிந்தளவு சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளி நொச்சி மற்றும் வவுனியா போன்ற பிர தேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு சாட்சியமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# நிபந்தனையின் அடிப்படையில் அரசுடன் இணையவில்லை

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நிபந்தனை அடிப்படையில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவில்லை எனவும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிக்குமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பினை கட்சி ஏற்றுக்கொண்டதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ரபீக் ரஜாப்டீன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அழைத்தார் எனவும் இக்கட்சி அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதன் மூலம் சகல இன சமூகங்களும் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கின்றதென்பதனை உலக சமூகத்திற்கு உணர்த்த முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருதுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதன் மூலம் முஸ்லிம் நாடுகளின் உதவிகளை அபிவிருத்திப் பணிகளின் போது பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தேசத்தின் நலனை அடிப்படையாகக் கொண்டு எவ்வித நிபந்தனைகளுமின்றி தமது கட்சி ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)



யாழ் கன்னாதிட்டிச் சந்தியில் நேற்றுக் காலை வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ தடம் புரண்டு காணப்படுவதை படத்தில் காணலாம்.
படம் :- எஸ்.கரன்




வாக்காளர் பதிவு 2010

வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

✓ வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30 ஆம் திகதி வரை தொடரும்.

✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக்கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:

CPA

minority rights group international

# அமைதியாக நடக்கிறது குடியமர்வு; அனல் பறக்கிறது கண்டனங்கள்

"எங்களுக்கு மணியம் தோட்டத்தில் காணி இருக்க அதில் தமிழ்மக்கள் வீடுகளை அமைத்துள்ளனர். அவர்களை எழும்புமாறு கோரி மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை" இது மீளக்குடியமரவென யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள சிங்களக் குடும்பங்கள் அமைப்பின் செயலாளர் தெரிவித்த கருத்து.

மீளக் குடியேறவென கடந்த ஒகஸ்ட் மாதம் சிங்களக் குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

இங்கு வந்த அவர்கள் யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியிருந்து கொண்டு தம்மை மீளக் குடியமர்த்த வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதற்காக அரசியல்வாதிகள் முதல் அரச உத்தியோகத்தர்கள் வரை சகலரும் புகையிரத நிலையத்துக்குச் சென்று அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.


இந்த நிலையில் "எந்தவித நடவடிக்கையும் இல்லை" எனக் காரணம் கூறி 70 சிங்களக் குடும்பங்கள் நாவற்குழியிலுள்ள அரச காணியில் கடந்த 10 ஆம் திகதி இரவோடு இரவாக குடியேறினர்.

சிங்கள மக்களின் குடியேற்றம் குறித்து தனக்கு தெரியாது என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், கிராம சேவையாளர் ஊடாக அறிந்து கொண்டேன் என சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி

**நாவற்குழியில் சிங்கள மக்கள் இரவோடு இரவாக குடியேறியதையடுத்து அப்பகுதியில் சொந்தக் காணிகளையுடைய தமிழ் மக்கள் அவசர அவசரமாக தமது எல்லைகளை வரையறுத்து வேலி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.**

சாந்தசீலனும் அறிவித்தனர். நாவற்குழியி லுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபயின் காணிகளுக்குள் சிங்கள மக்கள் குடியேறியதை அறிந்துள்ளேன் என சம்பவம் இடம்பெற்ற தினத் துக்கு மறுநாள் அரச அதிபர் கூறினார்.

அரச காணிகளுக்குள் எவரினதும் அனுமதி இல்லாமல் குடியேறலாம் என்றால் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச காணி


பார்க்க மட்டுமே முடியும்...

களில் எப்போதோ குடியேறியிருப்போம் என நாவற்குழி மக்கள் கூறினர்.

தற்போது சிங்கள மக்கள் குடியேறியுள்ள இடம் முன்னர் விடுதலைப் புலிகளினால் அம்மான் குடியிருப்பென பெயர் சூட்டப்பட்டு வீடில்லாத மக்களுக்கு அங்கு வீடமைத்து கொடுக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் அக் காணியில் எவரும் இருந்திருக்கவில்லை.

தற்போது யுத்தம் நிறைவடைந்த பின்னர், முன்னர் அப்பகுதியில் இருந்த மக்கள் திரும்பவும் அங்கு குடியேறச் சென்ற போது அப்பகுதி கிராமசேவையாளர் தடுத்துள்ளார்.

"இது அரசுக்கு சொந்தமான காணி அனுமதிபெற்றே குடியமர முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து அவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்த நிலையிலேயே சிங்கள மக்களின் குடியமர்வு இரவோடு இரவாக இடம்பெற்றுள்ளது.

இந்தக் குடியமர்வு திட்ட


வீடமைக்கும் சிங்களக் குடும்பங்கள்

மிட்ட ஒரு செயற்பாடு என்றே எண்ணத் தோன்றுகின்றது.

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியேறுவதற்கென, முன்னைய நாட்களில் அங்கு அரச அதிகாரிகளின் உத்தரவின் பேரில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுள்ளன. அரச காணிக்கான எல்லைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் என்பனவும் பொருத்தப்பட்டன.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் அங்கிருந்த மக்கள் சந்தேகம் கொள்ளவில்லை.

நுளம்பு ஒழிப்புக்காக துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவே அவர்கள் எண்ணியிருந்தனர்.



அறிவிப்புப் பலகை

### பதில் கிடைக்கவில்லை குடியேறினோம்

கடந்த 10 ஆம் திகதி மீளக் குடியேறிய சிங்கள மக்களின் செயலாளர் பின்வருமாறு கூறினார்.

"நாங்கள் புகையிரத நிலையத்தில் தங்கியிருந்தோம். பல பிரமுகர்கள் வந்து எம்மை சந்தித்தனர். உறுதி மொழிகளை வழங்கினர். நடவடிக்கை

**அனுராதபுரம் மற்றும் வவுனியா பிரதேசங்களிலிருந்து அனுமதி பெற்று காட்டுத்தடிகள் குவிக்கப்பட்டுள்ளன. 70 குடும்பங்களுக்கும் எல்லைகள் வரையறுக்கப்பட்டு காட்டுத்தடிகளைக் கொண்டு வீடுகள் அமைக்கும் முயற்சிகள் தொடங்கிவிட்டன.**

எடுப்பதாக கூறினர். ஆனால் எதுவும் செய்யவில்லை. அரச காணிகள் இருந்தால் அவற்றில் எங்களை குடியமர்த்துவோம் என்றார்கள். அதுவும் நடைபெறவில்லை. நிவாரணம் தருமாறு அரச அதிபரை கோரினோம். நிரந்தர வதிவிடம் இல்லாமல் நிவாரணம் தர முடியாது என அவர் மறுத்துவிட்டார். தற்காலிக கொட்டில்களை அமைப்பதற்கு உதவிகளை வழங்குமாறு ஐ.நா. அமைப்புகளிடம் கோரினோம். குடும்ப அட்டை இல்லாவிடின் அவற்றை வழங்க முடியாது என

**கிராமசேவையாளர் தடுத்திருக்காவிட்டால் எப்பொழுதோ குடியமர்ந்திருப்போம்**-நாவற்குழிவாசி

அவர்கள் கை விரித்துவிட்டார்கள்.

நாங்கள் என்ன செய்வோம். அரச காணிகளை தேடிச் சென்றோம். மணியம்தோட்டத்தில் எமது காணிகள் உள்ளன. ஆனால் அங்கு தமிழ் மக்கள் வீடுகளை அமைத்து குடியமர்ந்துள்ளார்கள். அவர்களை அங்கிருந்து வெளியேற்றி மீண்டும் ஒரு கலவரத்தை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை.

இந்த நிலையில் நாவற்குழியில் அரச காணிகள் இருப்பதாக அறிந்து இங்கு வந்தோம். அரச காணிகள் இருப்பதை அறிந்தோம். அயலிலுள்ள மக்களிடம் விசாரித்தோம். அவர்கள் இந்தக் காணிகளில் எவரும் வசிப்பதில்லை எனக் கூறினர்.

அதன் பின்னே நாம் இங்கு வந்து அமர்ந்துகொண்டோம். இதற்கு எவரினதும் ஆதரவு எமக்கு கிடைக்கவில்லை. நாமே சுயமாக வந்து தங்கியுள்ளோம். 70 குடும்பங்கள் இங்கு வந்துள்ளோம். மிகுதி 67 குடும்பங்கள் புகையிரத நிலையத்தில் தங்கியுள்ளனர்" என்றார்.

ஆனால் "தாம் 1995 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தக் காணிகளில் குடியிருந்ததாக நாவற்குழி மக்கள் தெரிவித்தனர்.

தாம் வைத்து வளர்த்த தென்னைகளே தற்போது உயர்ந்து

**பிரச்சினைகளை தடுப்பதற்கே மணியம்தோட்டத்தை விட்டுக்கொடுத்தோம்** -சிங்களப் பெண்மணி

வளர்ந்து பயன்தரக் கூடியவாறு உள்ளது" என அங்கு வசித்த பெண் ஒருவர் கூறினார். அப்பகுதி கிராமசேவையாளர் தடுத்திருக்காவிட்டால் தாம் ஏற்கனவே இந்த இடத்தில் குடியிருப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

சிங்கள மக்கள் குடியேறிய விடயம் எமக்கு தெரியாது. அவர்கள் குடியேறும் போது எமக்கு தெரிந்திருந்தால் நாம் அதனை தடுத்திருப்போம். மறுநாள் விடயமறிந்து அப்பகுதிக்குச் சென்ற போது அங்கு


அடைக்கப்படும் சொந்தக் காணி

கடமையிலிருந்த பொலிஸார் எம்மை திருப்பி அனுப்பியதாக மற்றொருவர் கூறினார்.

சிங்கள மக்களின் நாவற்குழி குடியேற்றம் தமிழ் மக்களின் பாரம்பரியத்தை அழிக்கும் அரசாங்கத்தின் முயற்சி என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின நடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றஞ்சாட்டினார்.

தட்டிக்கேட்க எவரும் இல்லை என்ற நினைப்பிலேயே இக்குடியமர்வு இடம்பெற்றுள்ளது.

இதன் மூலம் தமிழ் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர் எனவும் கூறியுள்ளார். இதே போன்றே நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் "சிங்கள மக்களை யாழ்ப்பாணத்தில் திட்டமிட்டு அரசாங்கம் குடியேற்றுவதாகவும் இது பதற்றமான சூழலை ஏற்படுத்தும்" எனவும் கூறினார்.

நாவற்குழியில் அத்து மீறி குடியேறிய சிங்களக் குடும்பங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அரச அதிபர், ஆளுநர் மற்றும் அமைச்சர்களின் திட்டமிட்ட செயலே இந்தக் குடியேற்றம் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறாக அனைவரினது கண்டனங்களும் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் மறுபுறத்தே சிங்கள குடும்பங்களின் குடியிருப்புகளும் புத்துயிர் பெறுகின்றன. அதிகாரிகளோ மௌனமாக இருக்கின்றனர். நடக்கப் போவது என்ன? பொறுத்திருந்து பார்ப்போம்.

**க.சதீபன்**

# யுத்தம் முடிவடைந்த போதிலும் ஏகே 47க்கு ஓய்வே இல்லை!

இலங்கையின் வடபகுதி முழுவதும் ஏகே.47 ஐத் தாங்கிய இராணுவச் சீருடை தரித்தவர்களையே காண முடிகின்றது. ஏகே.47 ஐத் தாங்கிய இராணுவச் சீருடை



அணிந்தவர்களே இலங்கையின் வடபாகம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றனர். மன்னாரிலிருந்து இறுதிப் போர் நடைபெற்ற முல்லைத்தீவு வரை அங்குள்ள மக்களைவிட இராணுவத்தினரே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இலங்கை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்து ஒன்றரை வருடங்களுக்கு பின்னரும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கின் நிலைமை இதுதான். இராணுவம் நடாத்திய போரின் இறுதி மாதத்தில் ஆயிரக்கணக் கான பொதுமக்கள் கொல்லப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் தோற் கடிப்பதற்கு முன்னதாக இலங்கையின் சிறுபான்மையி னரான தமிழர்களுக்கான சுதந்திர அரசொன்றுக்காகப் போராடினார் கள். இலங்கையின் சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதிக்கம் கொண்ட அரசால் திட்டமிட்ட முறையில் பாகுபாட்டிற்கு உட்படுத்தப்பட்டு வந்தார்கள்.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் பயணிகள் அடையாள அட்டைப் பரிசோதனைக்காக தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். வவுனியாவிலிருந்து நான்கைந்து கி.மீற்றர் தொலைவில் இருக்கும் இந்தச் சோதனைச் சாவடிக்கு வவுனியாவிலிருந்து பயணிகள் வருவதற்கு முன்பாக ஏற்கனவே மூன்று முறை அவர்கள் அடை யாள அட்டைப் பரிசோதனைக்கு ஆளாகியிருப்பார்கள்.

வடக்கின் பிரதான நகரான யாழ்ப்பாணத்திற்குப் போபவர்கள் அங்கிருந்து வருபவர்கள் இவ்வாறு சோதனைக்கு ஆளாகிறார்கள். அதிகம் கவலைப்பட ஏதுமில்லை. இது அவர்களுடைய வழமையான சோதனை நடவடிக்கை தான் என்றார் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் இருந்த ஒரு தமிழ் பயணி எனக்கு ஆறுதல் கூறுமுகமாக.

சமாதானம் வந்து விட்டது. நீங்கள் எங்கும் போய் வரலாம் என்கிறது அரசு. எவ்வாறிருந்த போதும் இந்த எங்கேயும் என்பது எல்லோருக்குமானது அல்ல. பாதுகாப்பு அமைச்சிலிருந்து அனுமதி பெற்றிருக்கா விட்டால், வெளி நாட்டவர்கள் ஓமந்தைச் சோத னைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டு விடுவார்கள். புறப்படுவதற்கு முன்னால் பாது காப்பு அமைச் சிற்கு தொலை பேசி எடுத்து அனுமதி கேட்டேன். அப்பகுதிக்குச் செல்வதற்கு அவர்கள்

## மீளக்குடியமர்ந்த மக்களை விட இராணுவத்தினரே வன்னியில் அதிகம்

அனுமதித்திருந்தார்கள். எனினும் ஓமந்தை சோதனைச் சாவடியில் அதற்கான அனுமதியைக் காட்டாத காரணத்தால் நான் திருப்பி அனுப்பப் பட்டேன்.

வெளிநாட்டவர்கள் பெருமளவில் விமானம் மூலம் மட்டுமே யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். பெருமளவு இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ள, போரின் காரணமாகச் சூறையாடப்பட்ட பிரதேசங்களைக் கொண்ட ஏ-9 வீதியூடாக வெளிநாட்டவர்கள் பயணம் செய்வதை அரசாங்கம் விரும்புவதில்லை.

மிக நீண்ட மூன்று தசாப்தகாலப் போர் முடிவடைந்த பின்னரும் வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் மிக மோசமான முறையில் அதிகரித்துச் செல்கிறது. ஏற்கனவே அங்கு ஏராளமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருக் கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போர் முடிந்த தறுவாயில் மூன்று இலட்சம் உள்ளக இடம் பெயர்ந்தோர் இருந்துள்ளனர். அவ்வப் பிரதேசங்களுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியின் மேற்பார்வையின் கீழேயே மீள்குடியேற்றங்கள் இடம் பெறுகின்றன. மீள் குடியேற்றத்துக்குத் தேவையான பொருட்கள் கொண்டு செல்லப்படும் போதெல்லாம் இச் சோதனை நிலையத்தில் அவை முழுமையாகச் சோதனை இடப்படுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் உதவியளிக்கும் அமைப்புக்களுக்கும் பெருமளவில் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்நிறுவனங்கள் தான் இம் மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் பல்வேறு தேவைகளை நிறைவேற்றி வந்தன.

எங்களுடைய நிறுவனத்தின் இலட்சினை பொருத்தப்பட்ட வாகனத்தை எடுத்து வர வேண்டாம் என்று அப்பகுதியில் இராணுவத் தளபதி எமக்கு உத்தரவிட்டிருக்கிறார் என்கிறார் உதவி நிறுவனப் பணியாளர் ஒருவர். அதேவேளை இலட்சினை அற்ற வாகனத்தில் பொருட்களை எடுத்துச் செல்லவும் முடியாது என்றும் அவர் கூறுகிறார்.

இடம் பெயர்ந்தோர் முகாமிலிருந்து ஒரு குடும்பம் விடுவிக்கப்படும் போது யு.என்.எச்.சி.ஆரினால் 25000 ரூபாய் (ஏறத்தாழ 224 டொலர்கள்) வழங்கப்படுகிறன. உலக உணவுத்திட்டம் ஆறு மாதங்களுக்கு அடிப்படை உணவு வசதி அளிப்பதாக உறுதியளிக்கிறது.



அதிர்ஷ்டவசமாக ஒகஸ்ட் வரை உலக உணவு உதவித்திட்டம் உதவியளித்திருக்கிறது. இது ஆறு மாதங்களுக்கும் அதிகமான காலமாகும் என்கிறார் அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி. தற்போது அரசாங்கம் விதைநெல் தந்துள்ளது. அதன் அறுவடையைப் பெறும்வரை ஏறத்தாழ நான்கு மாதங்களுக்கு எமக்கு உணவேதும் இல்லை என்றும் அவர் சொல்கிறார்.

கிராமத்தவர்களுக்கு பொது இடங்களைச் சுத்தம் செய்வது போன்ற சில வேலைகள் கிடைக்கின்றன. அதற்கு நாளொன்றுக்கு 4.5 டொலர் வழங்கப்படுகிறது.ஆனால் அது நிரந்தரமற்ற ஒரு தொழில். இக் கிராமங்களில் மருத்துவ வசதிகளோ மின்சாரமோ கிடைப்பதில்லை. படிக்கும் மாணவர்கள் உள்ள சில குடும்பங்களுக்கு கரித்தாஸ் நிறுவனம் சூரிய ஒளியில் இயங்கும் இலாம்புகளை வழங்கியிருக்கிறது.

அதேவேளை உதவிப் பணியாளர்களும் அரசாங்கமும் இப்பிராந்தியத்தில் இக்கிராமமே மிகச்சிறந்த மீள்குடியேற்றக் கிராமம் என்று கூறுகின்றன. கிராமத்தவர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அங்கு நிலவும் பல்வேறு கடப்பாடுகள் குறித்து முறைப்பாடு செய்கின்றன.

சஞ்ஜீவ் (பெயர் மாற்றப்பட் டுள்ளது) என்கிற 32 வயதான களப்பணியாளர் சொல்கிறார்: பெரிய மடுக்கிராமத்தைச் சூழ மீள் குடியேற்றப்பட்டவர்களுக்கு அரசாங்கமும் எவ்வித உதவி களையும் செய்யவில்லை என்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்ய அனுமதிக்கவும் இல்லை என்றும் குற்றம் சாட்டுகிறார்.

கடந்த ஓகஸ்ட்டில் குடி யேற்றப்பட்டவர்களுக்கு மலசல கூடங்கள் இல்லை. செப்டெம் பரில் மீள் குடியேற்றப் பட்டவர்களுக்கு தனியே கூரைத்தகடுகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன. செப்டெம்பரின் ஆரம்பத்தில் 255 குடும்பங்களைச் சேர்ந்த 1215 பேர் முல்லைத்தீவில் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கப்படாமல் முல்லைத் தீவு இராணுவத் தளபதி ஒருவரால் தடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை. தற்போது அவர்கள் ஒரு பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்கிறார் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன்.

அரசாங்கம் தமிழ் மக்களை இவ்வாறு கொடுமையான சூழ்நிலைகளின் கீழேயே வருடக்கணக்கில் வைத்திருக்க விரும்புகிறது. அப்போது தான் இந்த மக்கள் உணவையும் தங்குமிடத்தையும் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டி ருப்பார்கள். அவர்கள் ஒரு போதும் அரசியல் மற்றும் சமூக

**லி.யூ.குவாங்**

வியல் உரிமைகள் குறித்துச் சிந்திக்கமாட்டார்கள் என்கிறார் இன்னொரு தமிழ் அரசியல் வாதியான மனோகணேசன். இது தான் பலஸ்தீனத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

பலஸ்தீனர்கள் அகதி முகாம்களிலேயே வருடக் கணக்கில் வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார். இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் நிலைமை இவ்வாறு தான் உள்ளது. (14ஆம்பக்கம்பார்க்க..)

# யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்

03

**கடந்த செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்த்துறை கருத்தரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டளவிலே, யாழ்ப்பாணத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட கோகிலாம்பாள் கொலை வழக்குப் பற்றியும், பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றின. பத்துச்சதம், இருபது சதம் என விற்கப்பட்ட இப்பாடல் நூல்களை நான் கண்டிருக்கின்றேன். இவற்றை இயற்றியவர்களின் பெயர்களை அறியமுடியவில்லை. ஆனால், இந்தப் புத்தகங்களை கையிலே கொண்டு பாடித்திரிந்து விற்பனை செய்தவரைக் கோயில் விழாக்களிலே கண்டிருக்கின்றேன். என் நினைவிலுள்ள ஒரு சிறு பகுதியை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

*"உருத்திரபுரம் கேசு*
*உறுதியான கேசு*
*அழுத்தமாகப் பேப்பர்களைத்*
*திருத்தமாக நானும் பார்த்துப்*
*பொருத்தமாகப் பாடிவந்தேன்*
*தெரியுமா? -இது*
*உருத்திரபுரம் கேசு தானே புரியுமா?"*

இந்தஇடத்திலே முச்சந்தி இலக்கியம் என்னும் நூலை எழுதிய டாக்டர் ஆ.இரா. வேங்கடாசலபதி குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டுவது நலம் என்று கருதுகின்றேன்.

".... சாண்டில்யன் 1930 களின் இடைப் பகுதியில் சுதேச மித்திரன் நாளிதழில் நிருபராகப் பணியாற்றினார். அப்போது நீதிமன்ற வழக்கு விசாரணைகளைப் பற்றி விரிவாகச் செய்திகளை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அதைப்பற்றி அவர் பின்வருமாறு நினைவு கூர்ந்துள்ளார்.

குப்புபாய் கற்பழித்த வழக்கு, கிராமணி கொலை வழக்கு ..... அப்பொழுதெல்லாம் இந்த மாதிரி வழக்குக்களுக்கு அன்று மாலையே சூளைக் கவிஞரொருவர் பாட்டுப் போட்டு விற்பார். நான் வழக்குகளை வரிவிடாமல் குறுக்கு விசாரணை உட்படப் பிரசுரித்ததில் அவருக்கு அதிகம் வேலையில்லாது போயிற்று ...."

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஈழகேசரி, ஈழநாடு முதலான பத்திரிகைகள் கொலை வழக்குகள் பற்றிய விடயங்களை மிக விபரமாக வெளியிட்டன. இதனாலே பத்திரிகையின் விற்பனை அதிகரித்ததும் குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைகளைப் படிக்க முடியாதவர்களும், படிக்க வசதியற்றவர்களும் இத்தகைய கொலை வழக்கு விபரங்களை அரை வாய்மொழிப் பாடல்களினூடே அறிந்து இரசித்து வந்துள்ளனர். உணர்வு பூர்வமாகச் சிறப்பான ஓசையுடன் இவை பாடிக் காட்டப்பட்ட படியால் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து வாய்மொழியாகக் கையளிக்கப்பட்டன எனலாம்.

பரபரப்பான கொலைகள் பற்றி எழுந்த அரை வாய்மொழிப் பாடல்களைக் கூத்து, நாடகம் இவற்றுக்கிடையே (இடைப் பிறவரவர்கப்) பாடும் மரபும் இருந்துள்ளது. பெரும்பாலும் ஹார்மோனிய வித்துவான் (பெட்டிக்காரன்) அல்லது பபூன் இத்தகைய பாடல்களைப் பாடுவதுண்டு.

அறுபதுகளில் கீரி மலையில் நடைபெற்ற முக்கொலை பற்றிய அரை வாய்மொழிப் பாடல்கள் பல நாடக மேடைகளிலே பாடப்பட்டன. பார்வையாளர்க ளாலே பெரிதும் விரும்பப்பட்ட இந்தப் பாடல் கள் திரும்பத் திரும்ப நாடக மேடைகளிற் படிக்கப்பட்டதும் உண்டு. நினைவிலுள்ள பாடலின் ஒருபகுதி பின்வருமாறு :-

*"முக்கொலையே இது முழுக்கொலையே*
*இக்கொலை நடந்ததெங்கள் பக்கவூரிலே -*
*அதைக்*
*கேட்க வேர்க்குமே - கண்*
*பார்க்கக் கூசுமே..."*

இத்தகைய பாடல் மரபு ஒரு காலத்தியே யாழ்ப்பாணத்திற் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதை மறுப்பது கடினம்.


செந்நெறிப்பாங்கான இலக்கியங்களைப் படைத்த மரபுவழிப் புலமையாளர்கள் சிற்சில சந்தர்ப்பங்களிலே பாடிய (இயற்றிய) பாடல்களும், அச்சு வாகனம் ஏறாது வாய்மொழியாகக் கையளிக்கப்பட்டுள்ளமையைக் கண்டு கொள்ள முடிகின்றது. மிக அண்மைக்காலம் வரை வாய்மொழியாக வழங்கிய முருகேச பண்டிதர் இயற்றிய பாடல்கள் சிலவற்றைத் தி.சதாசிவ ஐயர் பதிவு செய்துள்ளார்.

கோப்பாயில் நடைபெற்ற களவுச் சம்பவத்தைப் பற்றி முருகேசு பண்டிதர் பாடிய பாடலையும் அரைவாய் மொழிப் பாடலாகக் கருதமுடியும். அந்தப் பாடல் பின்வருமாறு :-

*"வெள்ளை வேலன் வைரவன் காசிதான்*
*வீரனோ டருளம்பல மென்றிடும்*
*கள்வர் நால்வரும் கோவையிற் தன்மதம்*
*காட்டும் கென்ஸ்மன் வீட்டை நெருப்புறீ(க்)*
*கொள்ளை கொண்டு மறியலிற் சேர்த்திட(க்)*
*கூரையேறி இருவர் பிழைத்திட(ப்)*
*பள்ளனோ டருளம்பலமும் சிறைப்*
*பட்ட ஆண்டு விபவப் பெயரதே"*

முருகேச பண்டிதர் பாடியதாகக் கூறப்படும் இன்னொரு பாடலும் வாய்மொழியாக வழங்கி வருகின்றது. மல்லாகம் கோட்டு நீதவானாக இருந்த 'றைஸ்' என்பவர் வீதியோர முட்கிமுவை மரங்களை மட்டமாக வெட்டும்படி சட்டம் போட்டாராம். வெயில் காலம் ஆனபடியால் மரங்கள் பட்டுவிடும் என்று அவர் பாடிய பாடல் பின்வருமாறு :-

*"வெட்டி நட்ட முட்கிமுவை மெத்த*
*உயரமென்று*
*மட்டமாய் வெட்ட 'ம' றைஸ்துரையும் - சட்டமாய்*
*இட்டானே கட்டளையை இட்டபடி யாகிலிது*
*பட்டுவிடும் பட்டுவிடும் பார்"*



செந்நெறிப் பாங்கான இந்தப் பாடலை அரைவாய் மொழிப் பாடலாகக் கொள்ளலாமா? என்பது ஆய்வுக்குரியது. புலவர் ஒருவராற் பாடப்பட்டு வாய்மொழியாக வழங்கி வரும் இப் பாடலை எந்த வகையில் உள்வாங்குவது என்பது பிரச்சினையாகவே உள்ளது.

கோடு பற்றியும், கோட்டு வழக்குகள் பற்றியும், சட்டத்தரணிகள் பற்றியும் அரைவாய் மொழிப் பாடல்கள் பல யாழ்ப்பாணத்திலே பெருமளவுக்கு எழுந்துள்ளன.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறிலே, யாழ்ப்பாணத்தில் நடந்த பெண் கடத்தல் வழக்குப் பற்றிய விபரமான செய்திகளைக் குறிப்பிடும் கும்மிப்பாடல்கள், மிக அண்மைக் காலம் வரை (1978-1979) இப்பகுதியில் வாய்மொழியாக வழங்கி வந்துள்ளன. (தொடரும்)






கைதடி முதியோர் இல்லத்தில் இனிய இதயங்கள் அமைப்பும் லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்திய "முதியோருடன் ஓர் பகிர்வு" என்ற நிகழ்வு தீபாவளித் தினத்தன்று நடைபெற்றது. இந் நிகழ்வில் இனிய இதயங்கள் அமைப்புத் தலைவர் சி.விக்னராசா, இனிய இதய அமைப்பாளர் லயன் சி.சுந்தரேஸ்வரன், லயன்.கே. சிறிமகேஸ்வரன், லயன். சுந்தரலிங்கம், லயன் ஜெபராசா ஆகியோரையும் கலந்துகொண்ட முதியோர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சுன்னாகம் செய்தியாளர்)

# வசந்தபுரம், அண்ணாக்கிராமம், நித்தியவொளி பகுதி மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணத்திலுள்ள வசந்தபுரம், அண்ணாக்கிராமம், நித்தியவொளி ஆகிய கிராம மக்களை சந்தித்து அவர்களின் குறைபாடுகளை கேட்டறிந்துள்ள ஐக்கியதேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மழையினால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களின் வீடுகளையும் சென்று பார்வையிட்டுள்ளார்.

அண்ணாக்கிராமம், நித்தியவொளி கிராம மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எம்.பியிடம் எடுத்துக் கூறினர். வீடுகள் சேதமடைந்துள்ளமையினாலும் கூரைகள் சேதமடைந்துள்ளமையினாலும் மழைநீர் வீட்டுக்குள் வருவதாகவும், முறையான கால்வாய்த்திட்டம் இன்மையால் வெள்ளநீர் தேங்கி நிற்பதாகவும் இதனால் தாம் ஆண்டு தோறும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் இக்கிராம மக்கள் எடுத்துக்கூறினர்.

கிராமங்களில் போதியளவு மலசலகூட வசதிஇல்லையெனவும் வீடுகளுக்கு கூரைத் தகடுகள் அல்லது சீற்றுகள் வழங்கப்பட வேண்டுமெனவும் முன்பள்ளிக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டியன் அவசியம் குறித்தும் கிணறு வசதி ஏற்படுத்தப்பட வேண்டு மென்றும் இந்தக் கிராம மக்கள் வலியுறுத் தினர். தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் வழங்கினர்.

தமது 'கிராமங்கள் அமைந்துள்ள காணிகள் தனியாருக்கு சொந்தமானவை எனவும் எனவே இவ்விடயத்தில் தலையிட்டு தமது காணிகளை சொந்தமாக பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். தமது வீடுகள் சொந்தக் காணிகளில் அமைக்கப்படாமையினால் எந்தவித உதவிகளையும் பெற முடியாதநிலையில் அவலங்களை தாம் சந்தித்து வருவதாகவும், அவர்கள் சுட்டிக்காட்டினர்.

வசந்தபுரம் கிராமத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அங்கு மண் பறிக்கப்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. இந்த விடயங்கள் குறித்து வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்சவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் மலசல கூடம் மற்றும் முன்பள்ளிக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தினை தை மாதம் மேற்கொள்வதாகவும் விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.உறுதியளித்தார்.

இதனைவிட வசந்தபுரம் பகுதியில் பள்ளத்தினை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் .என்றும் அவர் தெரிவித்தார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்ற அவர் அங்கிருந்த கர்ப்பிணித் தாய்மார் மற்றும் வயோதிபர்களுக்கும் நிதி உதவிகளை வழங்கினார். (ஸ்ரீ)

# செங்கலடியில் வனபூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு மட்டக்களப்பு செங்கலடியில் வன பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொடுவாமடு பிரதேசத்தில் குறிப்பிடப்பட்ட வன பூங்காவை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மரம் நடுகை இடம்பெறவுள்ள வேளையில் இந்த வனபூங்காவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### ஏன் வீசி எறிந்தாய்

கண்களில் கசிந்தது
நெஞ்சில் வடிந்தது
தேகத்தில் உறைந்தது
உந்தன் அன்பு
உறவைத் தொலைத்தேன்
உறக்கம் தொலைத்தேன்
எதையோ எல்லாம் உனக்காக
தொலைத்தேன்
வாழ்வின் வசந்தம்
யாவும் இழந்தேன்
நெஞ்சில் உன்னை
நிதம் நினைத்தேன்
மொத்தத்தில் உன்னில்
என்னையே தொலைத்தேன்
இத்தனையும் செய்த
என் மனசை - இன்று
ஏன் வீசி எறிந்தாய்



செ.விஜிதபாமா
கோண்டாவில்

### உறவுக்காக

கொடுமையான போரின் போது
ஊமையாகிப் போன உதடுகள்
மௌனமாகிப்போன வார்த்தைகள்
தூக்கமின்றித்துடிக்கும் கண்கள்
கேள்வியற்றுப்போன செவிகள்
தூக்கத்தைத் தூரத்துரத்தும் கரங்கள்
அமைதியின்றி அலையும் கால்கள்
இவைஅனைத்திற்கும் மேலாக
இரத்தக் காடாகக் கிடக்கும்
ரணமான இதயத்தை மறக்க
நினைக்கின்றேன் ஆனால்
மறுபடியும் எண்ணுகின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்
கண்ணான என் உறவுகளுக்காக.



தி.மேரிடயானா
யாழ்ப்பாணம்

### கவிதைத்துளிகள் !!

**அப்பா**
அன்புக்காய் பிறப்பெடுத்த
கடவுளின் சாராம்சம்



**தாய்மை**
விலை மதிக்கப்பட
முடியாத பாசம்

**காதல்**
அன்பான உள்ளங்களின்
உன்னதமான வெளிப்பாடு

**நட்பு**
பந்தமின்றி சங்கமித்துக் கொள்ளும்
மனங்களின் இரத்த உறவு

வி.ஸிந்துயா
கோப்பாய் வடக்கு

### பிரிவு

தனிமையில் நீ தவிக்க - உன்னைக்
காணாது நான் துடிக்க - கைதிகளானோம்
காலச்சிறையில் கண்ணீரில் வாழ்வதற்கு

மெலிஞ்சியூரான்
ஊர்காவற்றுறை

### இமயம் தொட...



கேளுங்கள் கிடைக்கும்
தட்டுங்கள் திறக்கும்
எனும் நாதரின் வார்த்தைகளை
நெஞ்சில் நிறுத்தி - தினம்
நடைபோடு
தடைகள் பொடியாகும்
தரணியே உனதாகும்
தேடல்கள் தான் - வாழ்வின்
தேவைகளைத் தீர்க்கும்

மாவை. நா.கஜேந்திரா

### புன்னகை

பெண்ணே!...
என்
பாழடைந்த இதயவறையை
புனருஸ்தானம் செய்தது - நீ
அடிக்கடி உதிர்ந்து விடும் - உன்
உதட்டோரப்புன்னகை தான்...!



து.திலக்
யாழ்ப்பாணம்

## மௌனத்தின் தேடல் - 44



### கலங்காதே!

கலங்காதே கண்ணே!
உன் கண்ணீர் துளி கூட
நாளை காவியமாகும்
சோதனைகளை சாதனைகளாக்கு
உனக்காக நாளை வரலாறு
எழுதப்படும்.

பரன்
புனர்வாழ்வு நிலையம்,
தெல்லிப்பழை.

### தனிமை

தண்டவாளம் தனிலே
தட்டத் தனிமையிலே
அறியாத வயதினிலே
இதில் உனக்கென்ன வேலை
எழுந்துவா சகோதரனே

கி.ரம்யா
தாவடி

### பயணங்கள்

புகையிரத பாதையிலே
புண்பட்ட பாதத்தடங்கள்
புரண்டு தவழ்கின்றன
புது வாழ்வின்
புதுப்பயணத்தை
தொடரவே!

அ.மேரி அஜந்தா
எழுவைதீவு

### அழுகை

குழந்தாய்!
எறிகணைக்கு இரையானது
உனது இல்லம்
வெறும்தரையானது
உனது வாழ்வு
உணவுக்காய்
உறவுக்காய்
உடைக்காய்
நீ எதற்காய் அழுகிறாய்?

அ.றூபன்
ஈச்சமோட்டை

### அஞ்சி அழுவதேனோ

கொஞ்சி மகிழும்
பிஞ்சு மழலை - நீ
அஞ்சி அழுவதேனோ?
பஞ்சமிகு பாரதனில் - உனை
வஞ்சித்த நிகழ்வெதுவோ?
வாஞ்சையுடன் உனையணைக்க
விஞ்சிநிற்பார் யாருளரோ?

ஜெ.கேமலதா

உன்உலகினைஇழந்தாயோ!
உயிர்வலி தாழாது
தவித்தனையோ...!
தவளும் வயதில்
தனியா கினையோ...!
தாராளோ தரணி மாதா
தன் மார்பினை...

பிரியங்கா
வல்வெட்டித்துறை

### ஏதிலிப் பாலகி

வேரோடு சாய்த்த
போர் தந்த வடு...
துளிர் விட்ட பிஞ்சுகளையும்
குறிவைத்து விரட்டியது
ஏதிலிப்பட்டம்
அரும்பிலே பெற்றுவிட்ட
பா(வி) லகி
சிதறல்களின் நடுவே
கதறுகிறாள்

சி.வினோவர்மன்
புளியங்கூடல்

### உயிரிழப்பு!

அகதியாய் அநாதையாய்
கதறி அழும் அக் குழந்தைக்கு
எங்கே புரியப்
போகின்றது - அதன்
அன்னை தந்தை உடன் -
பிறப்புக்களின் உயிரிழப்பு!

க.ஜெயக்குமார்
முல்லைத்தீவு

### மடிதேடி

பாரினிலே நீ பிறந்து
அன்னை மடியில் தவழ்ந்து
கொடிய யுத்தத்தால்
பெற்றோரைப்பிரிந்து
தவழ இடமில்லாமல்
தண்டவாளத்தில் தவழ்கிறாயோ?

சி.டனுசயன்
தாவடி றோ.க.த
பாடசாலை

### கண்மணி

தாலாட்டு எங்கே
தலை அணை எங்கே
யார் அடித்து அழுகிறாய் - கண்மணி
என் தவறு நீ செய்தாய்
போர்க்களம் கூட
பொறுமை காக்கவில்லையா
பார்கூட பரிதாபம்
பார்க்கவில்லையா
உனக்காக...


த.அரவிந்தன்
கோண்டாவில்

### சிறை

உன் பெற்றோர் உயிர் இறப்பில்;
உன் உடன்பிறந்தோர் புனர்வாழ்வில்;
உலகோ புன்சிரிப்பில்;
நீயோ சிறை இருப்பில்!

ரகு
புனர்வாழ்வு நிலையம்,
தெல்லிப்பளை.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 45



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை


ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 19.11.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# சிறையில் இருந்து மாறுகிறார் சீமான்!


இயக்குநர் சீமான்

"எங்கள் மீனவனை அடித்தால் சிங்கள மாணவனை அடிப்போம்!" என சீமான் சீறியதை அரசியல் சாசனத்தை மீறிய பேச்சாக அர்த்தப்படுத்திய அரசு, அவரை தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் அடைத்தது. அரசியல் அரங்கில் சீமானின் சிறைவாசம் மறக்கடிக்கப்பட்டாலும், திரைத்துறையில் அந்தத் திகுதிகுப்பு இன்னமும் அடங்கவில்லை. 'அரசின் நெருக்கடிகளுக்கு ஆளாக வேண்டி இருக்குமோ?' என அஞ்சி சீமானுக்கு ஆதரவாகப் பேசவோ, சிறைக்குப் போய் சீமானை பார்க்கவோ திரைத்துறையினர் "ரிஸ்க்" எடுக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி திடீர் திருப்பமாக நடிகர் சத்யராஜ், இயக்குநர்கள் சுந்தர்ராஜன், அமீர் விக்ரமன்,ஆர்.கே. செல்வமணி,"சந்தனக்காடு" கௌதமன் ஆகியோர் வேலூருக்குப் போய் சிறையில் சீமானை சந்தித்துப் பேசி இருக்கிறார்கள். இது குறித்து நாம் இயக்குநர் அமீரிடம் பேசினோம்.

"எப்படி இருக்கிறார் சீமான்?"

"சீமானை சிறையில் பார்த்ததுமே நான் கேட்டது, 'சிறையில் இருப்பது நீங்களா... இல்லை நானா?' என்றுதான். தலை வாராத முடியோடும், தாடியோடும் இருந்த என்னைப் பார்க்கையில்தான் சிறையில் இருப்பது போல் இருந்தது. மழுமழுஷேவ் செய்து செமஸ்மார்ட்டாக இருக்கிறார். சொகுசாக இருக்கிறார் என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. சிறை அவரை எந்த வகையிலும் சிதைக்கவில்லை. ஆனால் உடம்பு கொஞ்சம் குறைந்திருக்கிறது. 'உள்ளே அதிக நேரம் கிடைக்கிறதாம். உடற்பயிற்சிகள் நிறைய பண்றேன். அதான் உடம்பு இன்னமும் இறுகிடிச்சு...!' என்றார். அவர் முகத்தில் கவலையே தெரியவில்லை. வழக்கமான களையும் சிரிப்பும் அப்படியே இருக்கிறது!"

"ஈழ விவகாரம் குறித்து இராமேஸ்வரத்தில் பேசியதற்காக நீங்களும் சீமானும் மதுரைச் சிறையில் இருந்தீர்கள். இப்போது வேலூர் சிறையில் அவரைத் தனியாகப் பார்த்தபோது உங்கள் மனநிலை?"

"கண்ணெதிரே ஈழ மண்ணையும் மக்களையும் வாரிக்கொடுத்துவிட்டு அது பற்றிய கவலையே இல்லாமல் அடுத்த கட்ட வேலையில் தீவிரமாகிவிட்டவர்கள் நாம். இராமேஸ்வரத்தில் இரத்தம் முறுக்கேற பேசியவன் நான், இன்றைக்கு ஜெயம் ரவியையும் நீது சந்திராவையும் வைத்துப் படம் பண்ண வந்துவிட்டேன்.

சீமான் அப்படி இல்லை இராமேஸ்வரத்தில் பேசியபோது இருந்த உணர்வும் வேகமும் வேலூர் சிறைக்குள்ளும் இருக்கிறது. கடைசிவரை போராடும் நியாயமான மூர்க்கம் அவரிடம் இருக்கிறது. ஒரு அரசியல் தலைவராக உருவெடுக்கும் தைரியமும் வீரியமும் அவரிடம் இருக்கிறது. வேடிக்கை பார்ப்பவர்களில் ஒருவனாக அவரைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டது உண்மை!"

"இத்தனை மாத சிறை வாழ்க்கை சீமானின் பொது வாழ்க்கைப் பார்வையை எந்த வகையிலேனும் மாற்றி இருக்கிறதா?"

"கிடையவே கிடையாது... சிறை வாழ்க்கை சீமானை முழு மாற்றி விட்டது என்பது தான் உண்மை! ஈழப்பிரச்சினை, அரசியல், அன்றாட நிகழ்வுகள் என்றுதான் சீமானால் இனி இயங்க முடியும். சிறை வாழ்க்கை மட்டுமல்ல இனி எத்தகைய நட்வடிக்கையாலுமே அவரைச் சிதைக்க முடியாது. சிறையில் இருந்து வெளியே வந்த உடன் அவருக்கு நடிக்கவோ, இயக்கவோ நேரம் இருக்குமா என்பது தெரியவில்லை. வரிந்துகட்டி களம் இறங்கும் அரசியல்வாதியாக சிறை அவரை வார்த்துவிட்டது. நேர அரசியல்வாதியாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் அவருக்கு இருக்கிறதோ இல்லையோ... ஆனால், வரும் காலத்தில் அனல் கிளப்பும் ஆயுதமாக அவர் மாறுவார்.!"

## சிறையில் நெஞ்சுறுதியோடு இருப்பவனை மீட்டெடுக்க சினிமாத்துறை எதற்கு!


வேலூர் சிறை வாசலில் அமீர்,விக்ரமன்,கௌதமன் ,சத்தியராஜ், சிவிசந்தர், செல்வமணி

"சக கலைஞனாக நினைத்துக்கூட சினிமா சமூகத்தினர் அவருக்குத் துணையாக நிற்கவில்லையே.. அறிவிக்கப்படாத சில அரசியல் மிரட்டல்கள்தான் இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறதோ?"

"சீமானை சந்திக்க விரும்பாதவர்கள் பரப்பிவிடும் கருத்து இது. அவரைப் பார்க்கச் சொல்லி யாரும் வற்புறுத்தவும் இல்லை. பார்க்கக்கூடாது என யாரும் மிரட்டவும் இல்லை.

அவரைப் பார்த்து விட்டு வந்ததால் என்னையும் சத்யராஜையும் இனி தள்ளி வைத்துவிடுவார்களா? அவரைச் சந்திப்பவர்கள் யார் யார் என்பதை கண்காணித்து மிரட்டுவதுதான் அரசாள்வோருக்கு வேலையா? இந்த விடயத்தில் சீமானும் மிகுந்த தெளிவோடு இருக்கிறார்.

யாரும் தன்னை வந்து சந்திக்கவில்லையே என்கிற எதிர்பார்ப்போ வருத்தமோ அவருக்கு இல்லை . திரைத்துறையினர் அவரைப் பார்க்கத்தான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால்,அதற்காக மிரட்டல், உருட்டல் என அரசு மீது பழிபோட்டு அவரைப் பார்க்காமல் இருப்பதற்கு காரணம் கற்பிப்பது தவறு! உண்மையில் சொல்வதானால் சீமான் சிங்கள மாணவர்கள் குறித்து என்ன பேசினார் என்பதே இங்கே பலருக்கும் தெரிய வில்லை. அப்படியிருக்க அந்தப் பேச்சு இறையாண்மை மீறலா.. அரசியல் சட்ட மீறலா என்பதெல்லாம் அவர்களுக்கு எப்படித் தெரியும்?"

"அவரை வெளியே கொண்டு வரும் முயற்சியில் திரைத்துறையினர் இறங்காதது நியாயமா?"

"இன்றைக்கு விஜயகாந்துக்கு ஒரு பிரச்சினை வந்தால் அவருக்குப் பின்னால் நடிகர் சங்கமா வந்து நிற்கும்,? அதேபோல்தான் சீமான் விவகாரமும். அவர் சினிமா இயக்குநர்களில் ஒருவர்தான். ஆனால் இன்றைக்கு அவர் ஒரு இயக்கத்தின் தலைவர். எதற்கும் அவர் பின்னால் நிற்பதற்கு ஒரு இயக்கம் இருக்கிறது. இத்தனை நாளை நெஞ்சுறுதி யோடு கடந்துவிட்ட அவரை சினிமா சமூகத்தினர் போராடி வெளியே கொண்டுவர வேண்டியது இல்லை. அவரும் அதை எதிர் பார்க்கவில்லை!" என்றார்.

**ஜூனியர் விகடன்**

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை



### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம் வரை)

சுகங்களெல்லாம் தேடிவரும்! தொழில் தொடங்க வாய்ப்பு வரும்!

*சந்திக்கும் மனிதர்களின் மூலம் சந்தோஷங்களை மட்டுமே பகிர்ந்து கொள்ளும் தனுசு இராசி நேயர்களே!*

உங்கள் இராசிநாதனான குரு இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து, பின் நான்காமிடத்தில் சஞ்சரித்து, மீண்டும் மூன்றாமிடத்திற்கு வந்து சில நாட்கள் தங்கி இருந்து, இப்பொழுது நான்காமிடத்தில் முழு பலத்தோடு எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நல்ல விதமாக சஞ்சரிக்கப்போகிறார்.

இடம், பூமி,வாகனம்,தாய் சுகம் என்று கருதப்படும் நான்காமிடத்தில் அர்த்தாஷ்டம குருவாக அமரப்போவதால், என்ன செய்வாரோ என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம்.கனமழை பொழியும் கார்த்திகை மாதத்தில் பெயர்ச்சியாகும் குரு, உங்களை பண மழையிலும் நனைய வைக்கலாம், பாச மழையிலும் நனைய வைக்கலாம். வந்திருக்கும் குருப்பெயர்ச்சியை நீங்கள் அவசியம் கொண்டாடி மகிழ வேண்டும்.

காரணம், உங்கள் இராசிநாதனாக குரு விளங்குகிறார். நீங்கள் இராசிநாதனை திருப்திபடுத்தினால், யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம். உங்கள் ஆசைகள் அனைத்தும் நிறைவேற வைப்பது குருவின் ஆதிக்கம்தான்.

அந்தக் குரு பலமிழந்திருக்கும் நேரத்தில் எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதில் இடையூறுகளே வந்து சேரும். நட்பு பகையாகும். நல்ல காரியங்கள் தள்ளிப் போகலாம். அந்த நிலை இனி மாறும்.

இம்மாதம் பலம் பெறும் குருவால் குழம்பிய உள்ளங்கள் எல்லாம் குதூகலமடையும். இளம் பருவத்தினருக்கு திருமணம் செய்வர். இயல்பாக தொழில் செய்வோருக்கு வளம் பெருகும். அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு அதிக பொறுப்புகள் வந்து சேரும்.

ஆயினும், குரு வழிபாட்டை முறையாக நீங்கள் மேற்கொண்டு, அனுகூலம் தரும் ஆலயத்தையும் தேர்ந்தெடுத்து வழிபட்டு வந்தால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் இல்லத்தில் அரங்கேறும்.

அத்தகைய குருவின் பார்வை 8,10,12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. ஒன்று நான்கிற்கு அதிபதியின் பார்வை, அஷ்டம ஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும்,விரயஸ்தானத்தையும் பார்க்கும் பொழுது, ஆரோக்கியம் சீராகும்.

அடுத்தவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறத் தொடங்கும்.

குரு உங்கள் இராசியைப் பார்க்கவில்லை என்றாலும், உங்கள் இராசிக்கு 8,10,12 ஆகிய இடங்களை பார்க்கப்போகிறார் அல்லவா? குருவின் 5,7,9 ஆகிய பார்வைகள் பதியும் இடமெல்லாம் புனிதமடையும் என்பது சாஸ்திர நியதி.

அந்த குரு எந்த இடத்தில் இருந்து கொண்டு, பார்க்கிறதோ, அந்த இடத்திற்குரிய ஆதிபத்ய பலன்களை தன் பார்வை மூலம் சேர்த்து வழங்கும்.சுமார் ஐந்தரை மாதங்கள் மட்டுமே மீனத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு இதுவரை நடைபெறாத சில காரியங்களை நடத்தி வைக்கப்போகிறது.

ஆரோக்கியத்திற்காக இதுவரை செலவிட்ட அதிக தொகைகள் இனி குறையும். நிலையாக வருமானம் வர நிழலாக ஒரு தொழிலை கூட அமைத்துக் கொடுக்கலாம்.

சென்ற ஆண்டில் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் ஆற்றல் இந்த குருவின் பார்வைக்கு உண்டு. விரயஸ்தானத்தையும் இந்த குரு பார்ப்பதால், சுகங்களுக்காகவும், சந்தோஷங்களுக்காகவும் சில விரயங்களை நீங்கள் மேற்கொள்வீர்கள்.

குறிப்பாக, வாகனங்களை வாங்கி பயணம் செய்யலாம் என்ற எண்ணம் மேலோங்கும். விரதங்களையும், வழிபாடுகளையும் நீங்கள் முறையாக மேற்கொண்டால் வெற்றிப்படிக்கட்டின் விளிம்பில் ஏறலாம்.

**நீங்கள் இலட்சியம் நிறைவேறும் வரை ஓய்வெடுக்காதவர்கள்!**

குருவின் ஆதிக்கம் பெற்ற உங்கள் சொல்லுக்கு எப்பொழுதும் ஒரு தனி மதிப்பிருக்கும். நீதியை நிலைநாட்ட பாடுபடுவீர்கள். நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். எளிய தோற்றத்துடன் காணப்படும் உங்களுக்குள் ஏதேனும் ஒரு இலட்சியம் குடிகொண்டிருக்கும். அந்த இலட்சியம் நிறைவேறும் வரை நீங்கள் ஓய்வெடுக்கமாட்டீர்கள்.

பிறரை நம்பி ஏமாறுபவர்களின் பட்டியலிலும் இடம் பிடிப்பீர்கள். உறவுக்கு கைகொடுக்கும் உங்களோடு பழகியவர்கள் கடைசி வரை உங்களை மறக்க மாட்டார்கள். இரவு, பகல் பாராது உழைப்பீர்கள்.

எதிர்காலத்தை வளப்படுத்த என்ன செய்யலாம் என்ற திட்டத்தை எப்பொழுதும் இதயத்தில் நினைத்துக் கொண்டேயிருப்பீர்கள். பின் விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் ஒரு சில சமயங்களில் பேசி விடுவீர்கள். பின் ஏன் பேசினோம் என்று வருத்தப்படுவீர்கள்.

பிறரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் உங்களுக்கு வாழ்க்கைத் துணை நல்ல விதமாக அமைய வேண்டுமானால், கூடுதல் பொருத்தம் தேவை. தக்க பொருத்தம் இருந்தால் தாரத்தால் யோகம் உண்டு. அரசியலிலும் மற்றும் அனைத்து துறைகளிலும் தலைமைப் பொறுப்பிற்கு தகுதியானவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள். உங்களுக்கு இந்த குருப் பெயர்ச்சி எப்படி அமையப்போகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

*"நான்கினில் குருதான் வந்தால்*
*நடந்திடும் தொழில்கள் மாறும்!*
*வீண்பழி சிலருக்குச் சேரும்!*
*வியாதிகள் அகன்று ஓடும்!*
*தூணென தோள் கொடுத்தோர்,*
*தொடர்பிலே மாற்றம் காண்பார்,*
*வானவர்க்கு அரசை நீங்கள்*
*வழிபட்டால் நன்மை கூடும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் குரு அர்த்தாஷ்டமக் குருவாக அமைவதால் விழிப்புணர்ச்சியோடு செயல்படுவதன் மூலம் எங்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலும். என்ன இருந்தாலும் உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது. பயணங்களிலும் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குரு பார்வைக்கு குழப்பங்களை அகற்றும் ஆற்றல் உண்டு. எனவே தற்சமயம் பெயர்ச்சியாகி உள்ள குரு உங்கள் இராசிக்கு 8,10,12 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டும் இதுவரை குணமாகாத நோய்கள் இப்பொழுது குணமாகும்.

என்றாலும், சனியின் பார்வை சுகஸ்தானத்தில் பதிவதால், புதிய நோய்களும் உருவாகலாம். எனவே, நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் பொழுது நல்ல மருத்துவரிடம் நீங்கள் ஆலோசனைகளைக் கேட்பது நல்லது.

சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஓரளவு ஈடுசெய்யும் வாய்ப்புக் கிட்டும். தொழிலில் கூட்டாளிகளால் ஏற்பட்ட கவலை அகல முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பது நல்லது.

உத்தியோகத்தில் ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு போன்றவைகள் தாமதப்படலாம். யோக பலம் பெற்ற நாளில் வழிபாடுகளைச் செய்தால் அதிகாரிகளின் அன்புக்கு பாத்திரமாகி எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

குறிப்பாக,தொழில் ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் என்றாலும், முழுமையாக மற்றவர்களை நம்பிச் செயல்படக்கூடாது. யாரைக் கூட்டு சேர்த்துக் கொண்டாலும், அவர்கள் ஜாதகத்தை முழுமையாகப் பார்த்து அதில் தொழில் ஸ்தானம் நன்றாக இருக்கிறதா? அந்த ஸ்தானாதிபதி, உங்கள் தொழில் ஸ்தானாதிபதிக்கு ஏற்றவராக இருக்கிறாரா? என்பதை பார்த்த பின்னே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

மதிப்பும், மரியாதையும் உயரும். மகத்தான பதவிகளும் கிடைக்கும். தெய்வ பலம் உங்களுக்கு பின்னணியாக இருப்பதால், திடீரென வரும் மாற்றங்கள் உங்களை ஆச்சரியப்பட வைக்கும். தந்தை வழியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பெற்றோர் வழி உடல் நலத்திற்காக சிறிது செலவிடும் சூழ்நிலை உண்டு. மண்ணை வாங்கலாமா? மனையை வாங்கலாமா? பொருளை வாங்கலாமா? என்று சிந்திப்பீர்கள்.

என்ன வாங்கினாலும் எதிர்காலத்தில் நலம் கிடைக்கும் என்பதால், விரயஸ்தானத்தை குரு பார்க்கும் இந்த நேரத்தில் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயமும் கொடுக்கும். நிலையாக வங்கியில் வைத்த வைப்பு நிதியை எடுத்து வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள்.

பழுதடைந்த வாகனங்களை புதுப்பிப்பதும், வீட்டின் விஸ்தரிப்புக்கு செலவிடுவதும் இக்காலத்தில் உகந்ததாக அமையும். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள், பிள்ளைகளின் கடல் தாண்டும் முயற்சிகளுக்கு செலவிட்டு

**சிவல்புரி சிங்காரம்**

மகிழ்வீர்கள். குடும்பத்திற்கு தேவை யான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்ப்பீர்கள். ஆன்மீக பயணங்களில் ஆர்வம் கூடும். தெசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு திடீரென இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஏற்படலாம்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

நான்காமிடத்துக் குருவால் நன்மைகள் வந்துசேர, தென்முக கடவுளை வழிபட்டு, எதிர்காலத்தை இனிமையாக்கி கொள்ளுங்கள்.

**தனுசு இராசிப் பெண்களுக்கு தன்னம்பிக்கை தேவை!**

தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தக் குரு பெயர்ச்சியால் வரவும்– செலவும் சமமாகும். வசதிகளைப் பெருக்கிக் கொண்டாலும், நிம்மதி குறையலாம். அடிக்கடி ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படும். பக்கத்து வீட்டாருடன் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது.

குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் சென்றால் மன நிம்மதியை வரவழைத்துக் கொள்ளலாம். தாய் வழி ஆதரவு கிடைக்கும். புகுந்த வீட்டில் உங்கள் கருத்துக்களை அதிகம் வலியுறுத்துவதன் மூலம் புதிய பிரச்சினைகள் உருவாகலாம்.

எனவே சுய ஜாதகத்தில் தெசா புத்தி பலமறிந்து தெய்வ தரிசனங்களை மேற் கொள்ளுங்கள். தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

(தொடரும்)



கலாபூசணம் சு. துரைசிங்கம் எழுதிய ஐந்து நூல்களின் வெளியீட்டுவிழா அண்மையில் சுன்னாகம் பொது நூலகத்தில் பிரதேசசபைத் தலைவர் திருமதி சு.முருகநேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் வெளியீட்டுரையை கல்வியியலாளர் பா. தனபாலன் நிகழ்த்துவதையும் மதிப்பீட்டுரையை விரிவுரையாளர் லலீசன் நிகழ்த்துவதையும் பிரதியினை லலீசனிடமிருந்து துர்க்கா பொத்தக சோலை உரிமையாளர் சபா. புஸ்பநாதன் பெற்றுக் கொள்வதையும் நடுவில் நூலாசிரியர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சுன்னாகம் செய்தியாளர்)

# இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை 20 பில்.டொலராக அதிகரிப்பதே இலக்கு

## - ஏற்றுமதி அ/தி சபை பணிப்பாளர் மரைக்கார்

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை இருபது பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே இலக்கு என இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி யூசுப் கே.மரைக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்ற பாதிணிகள் மற்றும் தோற் பொருட்கள் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தோற்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தி இப்பொருட்கள் மீது வெளிநாட்டு ஆர்வத்தை ஏற்படுத்தவும், அதற்கமைய இப் பொருட்களின் தரம், தன்மை போன்றவற்றை உறுதிப்படுத்தும் வகையிலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பாதணி, தோல் உற்பத்தி பொருட்களுக்கு வெளிநாட்டில் அதிக கேள்வி காணப்படுகின்றது. எனவே எமது உற்பத்தி பொருட்களின் தரம், கவர்ச்சி என்பவற்றில் நாம் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

தற்போது ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை 2015-ம் ஆண்டளவில் 15 பில்லியன் அமெ.டொலர்களாகவும், 2020-ம் ஆண்டளவில் 20 பில்லியன் டொலர்களாவும் அதிகரிக்கச் செய்வதே எமது இலக்கு. அதற்கு ஏற்ப எமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம் என்றார்.

# 2ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி ஜனவரியில்

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அடுத்த வருடம் ஜனவரி 21,22,23-ம் திகதிகளில் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இரண்டாவது வெற்றிகரமான வருடமாக யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி2011 (Jaffna International Trade fair 2011 (JIFT) ஐ, லங்கா எக்ஸிபிஷன் கொன்பரன்ஸ் சேவிசர்ஸ், வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து ஒழுங்கு செய்யவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, வர்த்தகத்துக்கான கதவு திறப்பு (Open for Business) எனும் தொனிப்பொருளில் இக் கண்காட்சி இடம்பெறவிருக்கின்றது.

வடக்கிற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்படும் இக் கண்காட்சியில் கட்டிட நிர்மாணம், உள்ளக வடிவமைப்பு, விருந்தோம்பல் வர்த்தகம், ஹோட்டல் நிர்வாகம், மென்பான வகைகள், பொதியிடல், விவசாய உற்பத்திகள், இயந்திர சாதனங்கள், அழகு சாதனப் பொருட்கள், மின் உபகரணங்கள், ஆடை வகைகள், பரிசுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், குளியலறை உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், சுகாதார உற்பத்திகள், காகிதாதிகள் என பல்வேறுபட்ட துறைகளை உள்ளடக்கியதாக கண்காட்சி கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இக் கண்காட்சி குறித்து இலங்கை கைத்தொழில் வர்த்தக சம்மேளன (FCCISL) தலைவர் கோசல விக்கிரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், 30 வருட யுத்தத்தின் பின்னர் தற்போது யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பொருளாதாரம் சீரான அதிகரிப்பைக் காட்டுகிறது. ஆனால் விரைவாக அபிவிருத்தி அடையக்கூடிய சந்தை அமைப்பைக் கொண்டது எனத் தெரிவித்தார்.

இதேவேளை இக் கண்காட்சி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் நிறுவன பணிப்பாளர் இம்ரான் ஹசன்,

யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சி தொழில் முயற்சியாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் அவர்களின் வர்த்தகத்துக்கான ஒரு தளத்தினை உருவாக்கும்.

யாழ்ப்பாணத்தின் தனிநபர் வருமானம் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுமிடத்து அதிகமானது. இங்குள்ள தொழிற்துறையினர் தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிக்க வங்கிகளின் உதவியை எதிர்பார்த்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுமிடத்து இம்முறை அதிகளவான கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# இல.பொருளாதாரம் அடுத்த ஆண்டில் இருந்து 'இரட்டை எண்' வளர்ச்சி அடையும்

## டுபாய் முதலீட்டு நிறுவனம் எதிர்வுகூறல்



இலங்கையின் பொருளாதாரம் தற்போதைய 6 சதவீதத்திலிருந்து 12 வீதம் வரை அதிகரிக்கலாம். அதாவது 2011ஆம் ஆண்டிலிருந்து 'இரட்டை எண்'(Double Digit) வளர்ச்சியைப் பேணும் என ஹெரேமிலா செக்யூரிட்டீஸ் (Heraymila Securities) என்ற புதிய பங்குத் தரகு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹெரேமிலா செக்யூரிட்டீஸ் என்பது டுபாயைத் தளமாகக் கொண்ட ஹெரேமிலா இன்வெஸ்மன்ட் நிறுவனத்தின் ஒரு பிரிவாகும்.

இலங்கை நடுத்தர வருமானத்தைக் கொண்ட ஒரு வளர்ந்து வரும் சந்தை என்பதை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக் கொண்டுள்ளது. 2009-ம் ஆண்டில் 3.5 சதவீதமாக இருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடத்தில் 7 சதவீதமாக அதிகரிக்கும் என்று நாணய நிதியத்தால் எதிர்பார்க்கப்படுகின்றது. இதேநேரம் மத்திய வங்கி, பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கிறது.

யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் அதிகரித்த பொருளாதார பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டே மத்திய வங்கி அதன் ஊகத்தை வெளியிட்டுள்ளது.

ஹெரேமிலா செக்யூரிட்டீஸ் அங்குரார்ப்பண நிகழ்வில் அந் நிறுவனத்தின் பொருளியல் ஆலோசகர் ஷுமுபீல் யாக்கூப் கூறியதாவது,

நீண்ட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பொருளாதார மீட்சி துரித கதியில் இடம்பெறுவது வழக்கம், 2011ஆம் ஆண்டிலிருந்து இலங்கை இரட்டை எண் வளர்ச்சியை அடையுமென்பதற்கு எல்லா அறிகுறிகளும் தென்படுகின்றன என்று தெரிவித்தார்.

ஹெரேமிலா இன்வெஸ்மன்ட் நிறுவனம் 2011-ம் ஆண்டில் கொழும்பு பங்குச் சந்தையில் அடிப்படையில் வலுவான பங்குகளில் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிடத் திட்டமிட்டுள்ளதாக அந் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் வினோத் கிருஷ்ணன் தெரிவித்தார்.

### கப்ரால் நம்பிக்கை

தற்போது 6 பில்லியன் டொலர் மதிப்பிலான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. கொழும்பு துறைமுகத்தின் தென் முனையம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலரில் விரிவாக்கம் செய்யப்படுகிறது. 2011இல் மன்னாரில் 5 எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. 14 உள்நாட்டு விமான நிலையங்கள் உட்பட ஒரு சர்வதேச விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை எண் இலக்கை அடைவது சாத்தியமானதே என பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் 31-வது தேசிய பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6658.45 | 6600.06 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7199.62 | 7157.95 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4342.72 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** றிப்கொம்பர்ஸ்(67.80), ரீ சிமோல் ஹோல்டர்(255.00), சி.ஐ.ரி.(247.50), திறி ஏக்.பாம்ஸ் (43.50), ஹெஸ்னர்(115.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** களனி ரயர்ஸ்(47.70), மோரிஷன்ஸ்(X)(1000.00), வட்டபொட(800.00), மோரிஷன்ஸ்(1300.00), பின்லேஸ் கொழும்பு(191.70).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## செய்தித் துளிகள்

### வேலையற்றோர் தொகை 5.4 சதவீதமாக குறைவு

இலங்கையில் வேலையற்றோர் தொகை 5.4 சதவீதமாக குறைவடைந்துள்ளது. 2010-ம் ஆண்டின் 2-வது காலாண்டில் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தமாக வேலையற்றவர்களின் எண்ணிக்கை 437,000 என்றும் இதில் 4.1 வீதமானவர்கள் ஆண்கள் என்றும் 8 வீதமானவர்கள் பெண்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. 15முதல் 24 வயதெல்லையுடைய இளைஞர்களில் வேலையற்றோர் தொகை 20.7 வீதமாகவுள்ளது. ஆண்களை விட பெண்களே வேலையின்மையால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 2009-ல் 5.7 வீதமாகக் காணப்பட்ட வேலையற்றோர் வீதம் 2010-ல் 5.4 வீதமாக குறைந்துள்ளது.

### அமெரிக்காவில் 141 வங்கிகள் திவால்

அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி நீடித்து வருவதால் கடந்த 11 மாதங்களில் 141 வங்கிகள் திவாலாகியுள்ளன. சர்வதேச அளவில் சில ஆண்டுகளாக பொருளாதார மந்தநிலை நீடித்து வருகிறது. இதனால் வேலைவாய்ப்பு மற்றும் வங்கிகள் உள்ளிட்டவை கடுமையான பாதிப்புக்குள்ளாகின. பொருளாதார மந்தநிலை காரணமாக, சிறிய மற்றும் நடுத்தர வங்கிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. வேலையில்லா திண்டாட்டமும் 10 சதவீத அளவில் நீடித்து வருகிறது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.82 | 112.47 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 177.73 | 181.77 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 149.95 | 154.23 |
| சுவிஸ் பிராங் | 112.90 | 115.74 |
| கனேடிய டொலர் | 109.49 | 112.36 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.62 | 112.77 |
| சிங்கப்பூர் டொலர் | 85.09 | 87.45 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.52 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.38 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## முன்னணி தனியார் நிறுவனங்கள் சிலவற்றின் நிதிநிலை முடிபுகள்

நிதி நிறுவனங்களின் 3ஆம் காலாண்டு நிதி நிலை அறிக்கைகள் தற்போது வெளியிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இலங்கையின் முன்னணி தனியார் நிறுவனங்கள் சிலவற்றின் நிதி நிலைவரங்கள் வருமாறு,

ஜோன் கீல்ஸ் குழுமமானது 2010 செப்ரெம்பர் வரையான முதல் 6 மாதங்களுக்கு வரிக்கு முந்திய இலாபமாக ரூ.4.98 பில்லியனை பதிவு செய்துள்ளது என ஜோன் கீல்ஸ் குழுமத் தலைவர் சுசந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதே காலப் பகுதியில் நிறுவனத்தின் வருமானம் ரூ.26.86பில்லியனாகும்.

சிறிலங்கா ரெலிகொம் 2010இன் முதல் 9 மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ.3.73 பில்லியனையும், வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.2.40 பில்லியனையும் பதிவு செய்துள்ளது. இதேகாலப் பகுதியில் ரெலிகொமின் வருமானம் ரூ.37.34 பில்லினாகும். இது கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 4%அதிகரிப்பாகும்.

அற்கின் ஸ்பென்ஸ் பிஎல்சி 2010 மார்ச் 31-ல் முடிபடைந்த 6மாத காலப் பகுதியில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 1.6 பில்லியனை பதிவு செய்துள்ளது என கொழும்பு பங்குச்சந்தைக்கு நிறுவனம் அறிவித்துள்ளது. ஹோட்டல், சேவைத்துறை, சட்டத் தீர்வு வழங்குதல் மற்றும் முதலீடுகளில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

நிறுவனத்தின் மருத்துவத்துறை மற்றும் சக்தி வளப்பிரிவின் வளர்ச்சியால் ஹேமாஸ் ஹோல்டிங் நிறுவனத்தின் வருமானம் 30 செப்ரெம்பர் 2010-ல் முடிபடைந்த முதல் 9 மாதங்களில் வருமானம் ரூ.8.7 பில்லியனைப் பெற்றுள்ளது. இது கடந்த வருடத்தை விட 18% வளர்ச்சியாகும். கொழும்பு பங்குச்சந்தையில் இக்குழுமத்தின் சந்தை மூலதனம் 2,300 கோடிக்கும் அதிகமாகும்.

# ஐந்து அம்சத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளின் பண்புசார் விருத்தி குறித்து அவதானிக்கப்படும்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளின் பண்புசார் விருத்தி ஐந்து அம்சத் திட்டத்தின் மூலம் அவதானிக்கப்படுமென கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி உயர் மகளிர் கல்லூரியில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற விருதுகள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பாடசாலைகளில் பண்புசார் விருத்தியை மேற்கொள்வதன் மூலம் சகல பாடசாலைகளையும் சிறந்த பாடசாலைகளாக உருவாக்க முடியும். இவ்வாறு சகல பாடசாலைகளும் சிறந்த பாடசாலைகளாக மாற்றமடையும் போது பிரபல பாடசாலைகள் என்ற பெயர் மாறிப்போகுமென அவர் கூறினார்.

இதனை அடைவதற்கு 5 அம்சத்திட்டம் உதவும். ஐந்து அம்சத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளின் பண்புசார் விருத்தி தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதோடு, ஒரு பாடசாலையின் அபிவிருத்தியில் அப்பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானது.

தத்தமது பிரதேச பாடசாலைகளை தரமிக்கதாக்குவது அந்தந்தப் பிரதேச அரசியல் தலைவர்களின் பொறுப்பா அல்லது அப்பாடசாலைகளின் அதிபர்,பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பெற்றோர்களின் பொறுப்பா என சிந்திப்பது அவசியமாகும்.

ஒவ்வொருவரும் தத்தமது பிரதேச பாடசாலைகளை சிறந்த பாடசாலைகளாக மாற்றவேண்டும் என்று சிந்தித்து செயலில் இறங்கும் போது பிரபல பாடசாலைகள் என்ற பெயர் மாற்றமடைந்து நாடு பூராகவுமுள்ள சகல பாடசாலைகளும் பிரபல பாடசாலைகள் என மாறுமென அவர் மேலும் கூறினார்.

(ஸ்ரீ-2)

# விடுதிக்கட்டணத்தை செலுத்தாமல் தப்பியோடியவர்கள் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு நுகேகொடை பிரதேசத்திலுள்ள கம்பனி ஒன்றின் ஊழியர்கள் திருமலையிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்ததுற்கான கட்டணத்தை செலுத்தாமல் கெப் வாகனத்தில் தப்பியோட முயன்ற போது மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

வர்த்தக நடவடிக்கையொன்றின் பிரகாரம் திருமலை வந்திருந்த அவர்கள் பிரஸ்தாப விடுதியில் தங்குமிடம் மற்றும் உணவு, மதுபானம் என்பவற்றைப் பெற்றுக் கொண்டிருந்தமைக்காக செலுத்த வேண்டிய மிகுதித் தொகை சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா எனத் தெரிய வருகின்றது.

ஆயினும் தங்கள் அலுவல் முடிந்தவுடன் அவர்கள் விடுதிக் கான கட்டணத்தைச் செலுத்தாது தப்பியோட முயன்றுள்ளனர். கம்பனியின் உரிமையாளர் பஸ் வண்டியொன்றில் ஏறி தப்பிச்சென்று விட்டார்.

அதன்பின் ஊழியர்களும் கம்பனி வாகனத்தில் மெதுவாக நழுவ முயன்றபோது விடுதி முகாமையாளர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிசார் தப்பியோடியவர்களை மடக்கிப் பிடிக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வாகனத்தின் பதிவு இலக்கத்தை அறிவித் திருந்தனர்.

திருமலையிலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர்கள் தப்பியோடி விட்ட நிலையில் சந்தேக நபர்கள் பாலம் பட்டாறு என்னுமிடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# மன்னாரில் விசேட அதிரடிப்படையினரால் ஆசிரியர் ஒருவர் உட்பட ஐவர் கைது

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினர் மன்னாரில் கடந்த 11 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் பேசாலை பிரதேசத்தில் வைத்து ஆசிரியர் ஒருவர் உட்பட 5 பேரைக் கைது செய்துள்ளனர்.

இவர்களில் இருவர் குடும்பஸ்தர்கள். மற்றைய மூவர் இளைஞர்களாவர். சந்தியா அருள்சீலன் மிரிந்தா, செபஸ்டியன் சீலன் குரூஸ், செபஸ்டியன் ஜெனிபர் குரூஸ், சேவியர் பெனோ பென்டியோ மற்றும் சந்தியாகோ மாசன்ட் குரூஸ் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த நிலையில் இவர்கள் ஐவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு அவர்களின் வீட்டாரிடம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# தேசிய ஔடதக் கொள்கை அடுத்த வருடம் அமுல்படுத்தப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய ஔடதக் கொள்கை அடுத்த வருடம் முதல் அமுல்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் 46 மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏனையவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

மேலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளை விற்பனை செய்வதற்கு அதிகாரம் அரச மருந்தகங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் இந்த மருந்துகளை விற்பனை செய்யும் தனியார் மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப் பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# பாரம்பரிய கைத்தொழில் சார்ந்த தேசிய கொள்கையொன்றை வகுக்க தீர்மானம்

(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் சார்ந்த தேசிய கொள்கையொன்று வகுக்கப்படும் அதேவேளை சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு இலகு கடன் வசதிகள் வழங்கு வதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுமென்றும் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவின் ஏற்பாட்டில் கண்டி பேராதனையில் நேற்று முன்தினம் மாலை பாரம்பரிய கைத்தொழிலாளர் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களுடனான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கண்டி மாவட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்களுக்குப் பெயர் பெற்ற உடுநுவர பகுதி சார்ந்த பித்தளை, வெள்ளி, தங்கம், தோற்கருவிகள் உட்பட பல்வேறு கைத்தொழில் உற்பத்தியாளர்களும் சிறுதொழில் முயற்சியாளர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு தங்களது தொழில்சார் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலப்பொருட்களின் தட்டுப்பாடு வெகுவிரைவில் நீக்கப்பட்டு பாரம்பரிய கைத்தொழில்கள் முன்னேற்றப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் அனுமதிப் பத்திரங்கள் பெறுவது முதலான சிக்கல்கள் அனைத்தும் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்க்கப்படுமென்றும் அமைச்சின் நோக்கத்தின்படி சிறுதொழில் முயற்சியாளர்களது முன்னேற்றம் மத்தியதர தொழில் முயற்சியாளர்கள் வரையிலும் மத்தியதர தொழில் முயற்சியாளர்களது முன்னேற்றம் பாரிய தொழில் முயற்சியாளர்கள் வரையிலும் முன்னேற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் உயரதிகாரிகள், மத்திய மாகாண கைத் தொழில் அமைச்சர், அமைச்சின் செயலாளர், அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ந-5)




- 1885 - செர்பியா பல்கேரியா மீது போர் தொடுத்தது.
- 1889 - நெல்லி பிளை என்ற பெண் ஊடகவியலாளர் 80 நாட்களுக்குள் உலகைச் சுற்றி வரும் தனது திட்டத்தை 72 நாட்களுக்குள் வெற்றிகரமாக முடித்தார்.
- 1918 - செக்கோஸ்லாவாக்கியா குடியரசாகியது.
- 1922 - பிபிசி தனது வானொலி சேவையை ஐக்கிய இராச்சியத்தில் ஆரம்பித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இங்கிலாந்தில் கவெண்ட்ரி நகரம் ஜேர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதமடைந்தது. கவெண்ட்ரி தேவாலயம் முற்றாக அழிந்தது.
- 1956 - ஹங்கேரியில் போர் முடிவுக்கு வந்தது.
- 1963 - ஐஸ்லாந்து தீவின் அருகில் உள்ள சூர்ட்ஸி என்னும் தீவு வட அட்லாண்டிக் கடலில் எழுந்த எரிமலையால் புதிதாகத் தோன்றியது.
- 1965 - வியட்நாம் போர்: லா ட்ராங் என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளுக்கும் வடக்கு வியட்நாம் படைகளுக்கும் இடையில் பெரும் போர் வெடித்தது.
- 1969 - அப்பலோ திட்டம்: அப்பலோ 12 விண்கப்பல் மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனை நோக்கிச் சென்றது.
- 1970 - மேற்கு வேர்ஜீனியாவில் அமெரிக்க விமானம் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 75 பேர் கொல்லப்பட்டனர்.
- 1971 - மரைனர் 9 செவ்வாய் கோளை சென்றடைந்தது. இதுவே பூமியில் இருந்து வேறொரு கோளின் செயற்கைச் செய்மதியாகச் செயற்பட்ட முதலாவது விண்கலமாகும்.
- 1975 - மேற்கு சகாராவை விட்டு ஸ்பெயின் விலகியது.
- 1990 - கிழக்கு ஜெர்மனி மற்றும் மேற்கு ஜெர்மனிகளின் இணைப்பிற்குப் பின்னர் போலந்துக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான எல்லைகள் வரையறுக்கப்பட்டன.
- 1991 - நாடு கடந்த நிலையில் வாழ்ந்த கம்போடியாவின் இளவரசர் நொரொடோம் சிஹானூக் 13 ஆண்டுகளின் பின்னர் புனோம் பென் திரும்பினார்.
- 1996 - டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2001 - ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை ஆப்கான் கூட்டுப் படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

### பிறப்புகள்

- 1840 - குளோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (இ. 1926)
- 1930 - எட்வேர்ட் வைட், நாசா விண்வெளி வீரர் (இ. 1967)
- 1954 - கொண்டலிசா ரைஸ், ஐக்கிய அமெரிக்காவின் 66வது செயலாளர்
- 1971 - அடம் கில்கிறிஸ்ட், அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்.

### இறப்புகள்

- 1831 - ஹெகல், ஜெர்மன் நாட்டு மெய்யியல் அறிஞர் (பி.1770)



1889 - ஜவஹர்லால் நேரு பிறந்தார், இந்தியப் பிரதமர் (இ.1964)



க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாட வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் ஆகியோர் உரையாற்றுவதையும் கட்டளைத்தளபதி மாணவியொருவருக்கு கையேட்டினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- எஸ்.கரன்)

## தெற்காசியாவில் இலங்கையிலேயே அதிகளவு நீரிழிவு நோயாளர்கள்

(கொழும்பு)

தெற்காசியாவில் அதிகளவு நீரிழிவு நோயாளர்களைக் கொண்ட நாடாக இலங்கைத் திகழ்வதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட தெற்காசிய பிராந்திய வலய நாடுகளில் இலங்கையில் அதிகளவு நீரிழிவு நோயாளர்கள் காணப்படுவதாகவும் 20-79 வயதுப் பிரிவினை உடையவர்களிடையே அதிகளவான மக்கள் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய நாடுகளை விடவும் அதிகளவான நோயாளிகள் இலங்கையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புகைபிடித்தல், மன உளைச்சல், பிழையான உணவுப்பழக்க வழக்கம், மதுபானம் அருந்துதல் ஆகியவற்றினால் அதிகளவு நீரிழிவு நோயாளர்கள் உருவாவதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட மருத்துவர் டாக்டர் பிரசாத்படுலந்த கூறினார்.

இலங்கையில் நபர் ஒருவர் பத்து கிராம் உப்பையும் 60 கிராம் சீனியையும், 15-20 வீதமான கொழுப்பு அடங்கிய உணவுகளையும் சராசரியாக உட்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## ஜனாதிபதியின் பதவிப் பிரமாண நிகழ்வுகள் தேசியவிழாவாக கருதப்பட முடியாது

### ஸ்ரீலால் லக்திலக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிப் பிரமாண நிகழ்வுகளை தேசிய விழாவாக கருதப்பட முடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண உறுப்பினர் ஸ்ரீலால் லக்திலக்க தெரிவித்துள்ளார்.

பதவிப் பிரமாண நிகழ்வுக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுவதில் தவறில்லை என்றபோதிலும் நிகழ்வுகளை தேசிய நிகழ்வாக கருத முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு பக்கமாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டியுள்ளதாகவும் இந்தப் பின்னணியில் வெற்றியைக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் வெற்றியின் பின்னர் தமக்கு எதிராக போட்டியிட்டவரை ஜனாதிபதி சிறையில் அடைத்ததாகவும் இதன் மூலம் நாட்டின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் புலப்படுவதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## வெள்ளப் பெருக்கினால் பாராளுமன்றத்திற்கு இரண்டுகோடி ரூபாவுக்கும் மேலாக நஷ்டம்

(கொழும்பு)

கொழும்பில் பெய்த பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதிக்கு இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட மதிப்பீடுகளிலிந்து தெரிய வந்துள்ளது.

அதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தின் சூழலில் பொருத்தப்பட்டிருந்த பல கருவிகள் பலத்த சேதத்துக்குள்ளாகியிருப்பதுடன் அவற்றைப் பழுது பார்க்கும் சாத்தியம் குறித்து இன்னும் எதுவும் கூற முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை பாராளுமன்ற அமர்வு கூடுவதற்கு முன்பாக சேதங்களைப் புனரமைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அத்துடன் சகதி படிந்துள்ள பாராளுமன்றச் சூழலை சுத்தப்படுத்த விசேட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## காருடன் சைக்கிள் மோதிய விபத்தில் முதியவர் படுகாயம்

(கொழும்புத்துறை)

யாழ். பிரதான வீதிக்கும் 2 ஆம் குறுக்கு வீதிக்கும் இடையில் காருடன் சைக்கிள் மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் காய மடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவமானது நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு நடைபெற்றது.

இவ்விபத்தில் யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியைச் சேர்ந்த ஜோசப் ரத்தினம் வயது 60 என்ற முதியவரே காயமடைந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, கோவிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த முதியவரை எதிரே வந்த கார் மோதிவிட்டு மாயமாக மறைந்து விட்டது. மயங்கிய நிலையில் இருந்த மேற்படி முதியவரை அயலவர்கள் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

விபத்துக்குள்ளான முதியவர் கார் வாகன இலக்கத்தை தெரியப்படுத்தியதை அடுத்து பொலிஸார் வாகனத்தை கண்டுபிடித்து விசாரணைகள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-51)

# யுத்தம் முடிவடைந்த போதிலும்....

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

தற்போது பெருமளவான இடம்பெயர்ந்தோர் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள் யு.என்.எச்.சி.ஆரின் அறிக்கையின் படி ஒகஸ்ட் 30 வரை 2 இலட்சத்து 58ஆயிரத்து846 பேர் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 25000 தொடக்கம் 30000 வரையானோர் இன்னமும் முகாம்களில் தடுத்து வக்கப்பட்டுள்ளனர்.

முட்கம்பிகளுக்குப் பின்னால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை எவ்வளவு சாத்தியமாக, விரைவாக விடுதலை செய்ய முடியுமோ அவ்வாறு விடுதலை செய்யுமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

முகாம்களில் இன்னமும் இருப்பவர்கள் அங்கு நிலைமை மோசமாக உள்ளதாகவே தெரிவிக்கின்றார்கள். வலயம் 4இல் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமிலிருக்கும் 21 வயதான ராணி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) சொல்கிறார் ஒகஸ்ட்டிலிருந்து போதுமானளவு தண்ணீர் விநியோகிக்கப்படுவதில்லை என்று. மின்சாரமோ ஒரு நாளைக்கு குறைந்த மணி நேரமே வழங்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இராணுவமும் அரச அதிபரும் எங்களை முகாம் மாறச் சொன்னார்கள். எங்களில் பலர் அதனை நிராகரித்தோம். ஏனெனில் மறுபடி புலிச்சந்தேகநபர்கள் என்ற கோதாவில் எம்மை இராணுவ அதிகாரிகள் கைது செய்து கொண்டு செல்வார்கள் என்பதால் நாம் அதனை எதிர்த்தோம்.

முகாமிலிருந்து வெளியில் செல்ல தமக்கு அனுமதிக்கப்பட்ட 10 நாட்களை விட தாமதமாக வந்த ஒருவரை இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கியதாகவும் ராணி குறிப்பிடுகிறார்.வலயம் 4 முகாமிலிருக்கும் 35 வயதான சரா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அங்குள்ள உணவுத் தட்டுப்பாடு பற்றியும் ஏனைய அவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு பற்றியும் சொல்கிறார். பருப்பையும் சோற்றையும் மட்டுமே தொடர்ந்து சாப்பிட்டு வருகிறோம். மரக்கறிகளோ வேறேதுமோ வழங்கப்படுவதேயில்லை என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார். மூன்று மாதங்களுக்கு முன்னரே சவர்க்கார விநியோகம் நிறுத்தப்பட்டு விட்டது என்றும் அவர் சொல்கிறார்.

சரா என்கிற இந்தப் பெண்மணி தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இழந்து தன்னந்தனியாக இந்த முகாமில் இருக்கிறார். சரா. மற்றும் ராணி ஆகியோர் சொல்பவை ஐ.நா.வின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பான ஆணையகத்தின் யூன் மாத அறிக்கையை உறுதி செய்கின்றன. அவ்வறிக்கை சொல்கிறது: யு.எஸ்.எய்ட்டால் வழங்கப்பட்டு வந்த உணவு விநியோகம் 31மே மாதத்துடன் முடிவடைகிறது. குடிநீருக்கான தட்டுப்பாட்டுக்கு யூலை இறுதியில் வாய்ப்பிருக்கிறது.

ஆசியாவின் மிக நீண்ட யுத்தம் ஒன்று முடிவுக்கு வந்து ஒன்றரை வருடங்களின் பின்னரும் இலங்கையில் உள்ள தமிழர்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை. பதிலாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது குடும்ப பலத்தை அரசியலில் நிறுவுவதற்கான முனைப்புக்களையே மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

செட்டெம்பர் எட்டாம் திகதி மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தம் இதற்கு ஒரு நல்ல உதாரணம். இது ஜனாதிபதியின் பதவிக்கால எல்லையை அகற்றுவதுடன் எல்லா சுயாதீனமான ஆணைக் குழுக்களுக்கும் தலைவர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்குகிறது.

பொதுமக்களுக்கான எவ்வித அறிவிப்பும், வாத விவாதங்களும், ஆலோசனைகளும் மேற்கொள்ளப்படாமலே இத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்கிறார் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியரான றொகான் எதிரிசிங்க. இது இனப்பிரச்சினை விடயத்தை ஒதுக்கி விடுகிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார். தமிழ் சிறுபான்மையினரை மோசமாக ஒதுக்கித் தள்ளும் நடவடிக்கைகளுக்கு இது வழிகோலும். தற்போது இந்த தீவு ராஜபக்ஷ குடும்பத்தின் தனிப்பட்ட அரசாட்சியை எதிர்நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

நன்றி:-குளோபல் தமிழ்




சுன்னாகம் லயன்ஸ் கழகம் நடாத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களையும் 120 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சுன்னாகம் கதிரமலை சிவன் மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட லயன் வி.மாணிக்கம், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன்,லயன் வை.தியாகராஜா, லயன் திருமதி.பூமாதேவி.மகாதேவா, வலிகாமம் வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சுன்னாகம் செய்தியாளர்)

# பல்கலை அனுமதியில் மாணவர்கள் இனரீதியாக உள்வாங்கப்படும் வரை சமாதானம் ஏற்படாது

## நல்லிணக் ஆணைக்குழு முன் ஸ்ரீ தாமோதரராஜா சாட்சியம்

(வட்டுக்கோட்டை)

இனப்பாகுபாடின்றி அனைவரும் ஒரு நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் அரசுகள் செயற்படும் போது தான் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன் ஸ்ரீதாமோதரராஜா சட்சியமளித்தார்.

சித்தன்கேணி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விசாரணையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைவரும் இனப்பாகுபாடின்றி ஒரே நாட்டு மக்களாக செயற்படவேண்டும். பல்கலைக்கழக அனுமதியின் போது இனரீதியாக மாணவர்கள் உள்வாங்கப்படும் செயற்பாடு உள்ளவரை நாட்டில் சமாதானம் ஏற்படாது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் சொந்த காணி இருந்தும் மீள் குடியமர்த்தப்படாத நிலையில் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தப்படுவது இன ரீதியான செயற்பாடாகும். இவ்வாறான நடவடிக்கையை அரசு நிறுத்த வேண்டும். மக்கள் நினைக்கின்ற போது அரசு செயற்பட வேண்டும்.

இதன் போது யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் குடியமர்த்தும் நடவடிக்கை தொடர்பில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விளக்கமளிக்கையில் ,

யாழ்ப்பாணத்தில் வசித்தமைக்குரிய ஆவணங்களான பிறப்பத்தாட்சிப்பத்திரம், அடையாள அட்டை, தபால் அடையாள அட்டை போன்றவற்றை சிங்கள மக்கள் சமர்ப்பித்திருந்தனர்.

எனினும் அவர்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் ஆராயப்பட்டு வரும் நிலையில் நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் அடாத்தாக அவர்கள் குடியமர்ந்துள்ளனர்.

ஆனால் சிங்கள மக்களை அரச காணிகளில் குடியமர்த்துவது தொடர்பான கொள்கை அரசிடம் இல்லை என்பது பொறுப்புள்ள அரசாங்க அதிபராக தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் குறிப்பிட்டார்.

இதற்கிடையே கருத்துத் தெரிவித்த ஸ்ரீதாமோதரரஜா, நான் கொழும்பில் பிறந்தேன். எனது பிறப்பத்தாட்சிப்பத்திரத்தில் கொழும்பு என உள்ளது.

எனவே எனக்கு கொழும்பில் அரச காணி ஒன்றை அரசாங்கத்தினால் வழங்க முடியுமா எனக் கேள்வி எழுப்பினார். (ஸ்ரீ-5)


### யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரைவுள்ளது)
### கேள்வி கோரல்
### இடிபாடுகளினையும், பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்தல்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரைவுள்ளது) கட்டடத்தின் இடிபாடுகளையும், பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் இயந்திர தளபாட வசதிகளைக் கொண்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் 420, ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக - மகாத்மாகாந்தி வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் பகல் 9.00 மணி முதல் 12.00 மணி வரையிலான நேரத்தில் கூரல் ஆவணங்களினை ரூபா 200/- இனை மீளப்பெறமுடியாத பணமாகச் செலுத்தி 15.11.2010ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளவும்.

கேள்வி கோரல் சமர்ப்பிக்கப்படும்

இறுதித் திகதி: 19.11.2010 ஆம் திகதி

காலை 11.00 மணிக்கு முன்னர் மேலதிக விபரங்களுக்கு எமது மதியுரைஞருடன் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரை அகம்,
08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

முகாமைத்துவப்பணிப்பாளர்,
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் . (வரைவுள்ளது)

(2847)


## மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தேசிய மரநடுகை விழாவை முன்னிட்டு வலிகாமம் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

எனவே வலிகாம வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் தத்தம் கோட்டக்கல்வி அலுவலகங்களில் தவறாது சமுகமளித்து மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளும்படி வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

☼ ☼ ☼

(சாவகச்சேரி)

தேசிய மரநடுகை விழாவை முன்னிட்டு தென்மராட்சி வலயப்பாடசாலைகளிலும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் 10.18 மணி வரை மரக்கன்றுகள் நடப்படவேண்டும் என்று தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கான மரக்கன்றுகளை இன்று பி.ப. 2 மணி தொடக்கம் 3 மணி வரை தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் தவறாது சமுகம் தந்து பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார். (ஸ்ரீ-29)

## வினாடி வினாப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் தேசிய விஞ்ஞான மன்றமும் இணைந்து வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களிடையே வினாடி வினாப்போட்டியினை நடாத்தவுள்ளது.

இப்போட்டியானது எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)


### 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 . 09 . 1950

உதிர்வு 01 . 10 . 2010



### அமரர் திருமதி.ஜெகஜோதி பாக்கியநாதன்

மலர் போல் பூத்த அம்மம்மாவே
நாள் முழுதும் உங்களைப் பார்த்த எம்மால்
உனதடியில் நாடி வர சொல்லாமல்
சில நொடியில் ஏன் சென்றீர்கள்?
உம் துன்பம் தான் பகிர தினம்
இங்கு வருபவர்கள்
உம் அருகில் வருமுன் ஏன் பறந்தீர்
ஆலயம் தினம் சென்று ஆயிரம்
வரம் வேண்டி
அன்பதை எங்களுக்கு
பொழிந்ததை ஏன் மறந்தீர்
உங்களது ஆத்மா சாந்தியடைய
உளமதைத் திறந்து மடத்துப்
பிள்ளையாரை வேண்டிநிற்கின்றோம்.

ஆனைக்கோட்டை மேற்கு,
ஆனைக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(2857)




அடி தடியில் இறங்கி அடிக்கடி சிறைக்குச் செல்லும் அர்ஜுனுக்கு அங்கு பிரேமின் நட்புக் கிடைக்கிறது. பிரேமின் தம்பிக்கு ஒரு ஆபரேஷன் செய்ய 5இலட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. சிறையிலிருந்து விடுதலையாகும் அர்ஜுன் 5 இலட்சத்துக்காக ஒரு கொலைப் பழியை ஏற்கத் தயாராகிறார். அதற்காக அவர் வல்லக்கோட்டை வருகிறார். அங்குள்ள ஆஷிஷ் வித்யார்த்தி, வின்சென்ட் அசோகன், ஓ.ஏ.கே. சுந்தர் ஆகியோரைக் கொண்ட வில்லன் கம்பனி உள்ளூர் ஜமீன்தார் சுரேஷை போட்டுத் தள்ளிவிட்டுப் பழியை அர்ஜுன் மீது போட இருக்கிறது. வந்த இடத்தில் கொல்லப்பட போகிறவர் நல்லவர் என்பதை அறிகிறார் அர்ஜுன். அத்தோடு அவர் காதலிக்கும் ஹரிப்பிரியாவை அடைய, வின்சென்ட் அசோகன் நினைக்கிறார். ஒரு ஹீரோவுக்கு இந்த விஷயம் போதாதா? விதவிதமான வேடங்களில் வந்து வில்லன் கூட்டத்தை ஒழித்துக் கட்டுகிறார்.

நாலு பாட்டு, நாலு பைட், பத்து சீன் காமெடி இவற்றை இணைக்க, முக்கால் மணி நேரத்துக்கு ஒரு ஸ்கிரீன் ப்ளே என்ற தனது வழக்கமான மசாலா பாணியிலிருந்து கொஞ்சமும் விலகாமல் படம் தந்திருக்கிறார் ஏ.வெங்கடேஷ். அடிதடி ஆக்ஷன், பறந்து பறந்து போடும் சண்டைக்கு அர்ஜுன். வழிய வழிய காதல், கொஞ்சம் கண்ணீர் நிறைய சிரிப்புக்கு ஹரிப்பிரியா. இருவரின் கூட்டணியில் வெளிநாட்டு வீதியிலும் கடற்கரையிலும் டூயட் பாட்டு. சிரிக்க வைக்க கஞ்சா கறுப்பு, சத்யன், வெ.ஆ.மூர்த்தி. வில்லனாக உறும ஒரு கூட்டம், காதுக்கு தினா, கண்ணுக்கு ஆஞ்சநேயலு. இத்தனையையும் கலந்து வல்லக்கோட்டையை வண்ணக்கோட்டையாக தர முயற்சித்திருக்கிறார்.

ஆக்ஷன் படத்தில் லாஜிக் கொஞ்சம் முன்ன பின்னதான் இருக்கும் என்பார்கள். அதற்காக அர்ஜுன் போடும் மாறுவேடத்தை கூட கண்டுபிடிக்க முடியாத நம்பியார் காலத்து வில்லன்களாகவோ ஆஷிஷ் வித்யார்த்தியும், வின்சென்டும் இருப்பார்கள். அதுபோகட்டும். மோட்டார் படகு போக்குவரத்து, தென்னை மர கடற்கரை, ஊருக்குள் வரும் பேக் வாட்டர் என்று பக்கா கேரளா பின்னணியை தமிழ்நாட்டில் இருக்கும் வல்லக்கோட்டையாக காட்டுகிறார்கள். சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறையில் இருக்கும் கைதி ஒருவரை சீட்டு குலுக்கிப் போட்டு விடுதலை செய்கிறார்களாம். ஒரு தண்டனை கைது பரோலில் பொலிஸ் காவலர் இல்லாமல் வருகிறாராம். ஒருநாள் நட்புக்காக ஹீரோ கொலைப்பழி ஏற்கிறாராம், சர்வ அதிகாரமும் படைத்த வில்லன், ஒரு கொலை செய்ய பல வருடம் திட்டம் போடுகிறாராம். கொஞ்சம் 2010 க்கு வாங்க பாஸ்.



திரை விமர்சனம்






'குட்டி', 'யாரடி நீ மோகினி' உள்ளிட்ட தெலுங்கு ரீ-மேக் படங்களில் இணைந்த தனுஷும், டைக்டர் மித்திரன் ஆர் ஜவகரும் மீண்டும் இணைந்து ரீ-மேக் செய்திருக்கும் ஒரு தெலுங்குப்படம் தான் உத்தம புத்திரன் தமிழ்படம்.

கதைப் படிதனுஷும் ஜெனிலியாவும் காதலர்கள். இந்தக் காதலுக்கு தனுஷ் குடும்பம் ஏகப்பட்ட உதவிகளைச் செய்கிறது. ஆனால் இவர்களது காதல் கை கூடக்கூடாது என உபத்திரவம் செய்கின்றனர் வில்லன்கள். அவர்கள் யார்? அவர்களை தனுஷ் எப்படி முறியடிக்கிறார் என்பதை காமடியாகவும், கலக்கலாகவும் சொல்கிறது உத்தமபுத்திரன் படத்தில் மொத்தக் கதையும்.

தனுஷ் வழக்கம்போலவே அப்பாவி இளைஞராகவும், அடிதடி ஹீரோவாகவும் அசத்தியயிருக்கிறார். ஜெனிலியா பொம்மை மாதிரி வந்து போனாலும் தன் பெண்மையால் ரசிகர்களைக் கவருகிறார். இரண்டு டசின் நட்சத்திரப் பட்டாளங்கள் படத்தில் இருக்கிறார்கள்.

விஜய் அன்டனியின் இதமான இசையும், பாலசுப்பிரமணியத்தின் அழகிய ஒளிப்பதிவும் குளுமை.

தீபாவளிக்கு வந்த படங்களிலேயே குடும்பத்துடன் பார்க்கக் கூடிய ஜனரஞ்சகமான படம் என்பதால் உத்தம புத்திரன் ஓ.கே.

திரை விமர்சனம்



# கமலின் அடுத்த கனவுப் படம்

நவம்பர் 20ஆம் திகதி நடைபெறவுள்ள இசை வெளியீட்டினைத் தொடர்ந்து விரைவில் திரையில் "மன்மதன் அம்பு" தொடுக்க விருக்கிறார் கமல். அதற்கு முன் தனது அடுத்த படம் குறித்த தகவலையும் வெளியிட்டுள்ளார்.

தசாவதாரம் படம் முடித்தவுடன் எடுப்பதாக இருந்தது... பட்ஜெட்டின் காரணமாக தள்ளிப்போடப்பட்ட படம் தான் ' ' தலைவன் இருக்கின்றான்" . 'உன்னைப்போல் ஒருவன்', 'மன்மதன் அம்பு', என அடுத்தடுத்து பிஸியாகிவிட்ட கமல் மீண்டும் இப்போது " தலைவன் இருக்கின்றான்" படத்தை எடுக்கும் முடிவுக்கு வந்துள்ளாராம்.

சர்வதேச சமூகத்தை பற்றியதான இந்தப்படம்தான் இப்போது கமல் மனதை ஆக்கிரமித்துள்ளதாம். கமலின் கனவுப் படங்களான மருதநாயகம், மர்மயோகி படங்களின் வரிசையில் அடுத்ததாக இருக்கும் இந்த " தலைவன் இருக்கிறான்" படத்தை ஹாலிவுட் நிறுவனத்துடன் இணைந்து கமலின் ராஜ்கமல் நிறுவனம் பெரிய பட்ஜெட்டில் தயாரிக்கவுள்ளதாம். இந்தப்படத்தை கமலே இயக்கலாம் என்றும் அல்லது கமலுக்கு பிடித்தமான இயக்குநர் யாரேனும் இயக்கலாம் என்றும் கமல்வட்டாரத் தகவல்கள் கசிகின்றின.



தனது படத்துக்கு கதை , திரைக்கதை ஆகியவற்றை தானே அமைத்தாலும், அந்தப்படத்தை இயக்கும் பொறுப்பை நம்பிக்கையான இயக்குநரிடம் விட்டுவிடுவது கமலின் வழக்கம்.சிறப்பான பழக்கமும் கூட. இந்த வகையில் "அன்பேசிவம்" படத்தை சுந்தர் சி. இயக்கினார். "தசாவதாரம்" படத்தை அடுத்து 'மன்மதன் அம்பு' படத்தையும் இயக்கும் பொறுப்பை எற்றார் கே.எஸ்.ரவிக்குமார்.

கமலுக்கு மிகவும் பிடித்தமான, குறிப்பிட்ட காலத்திற்குள் சிறந்த முறையில் படத்தை எடுத்துக் கொடுக்கும் இயக்குநராக இருப்பவர் ரவிக்குமார்தான். அதனால் , தலைவன் இருக்கின்றான்" படத்தை கமல் இயக்காத பட்சத்தில் அந்த வாய்ப்பு ரவிக்குமாருக்கே கிடைக்கலாம் என்ற எதிர்பாாப்பும் திரைவட்டாரத்தில் உள்ளது.

"மன்மதன் அம்பு"வில் கமலுடன் ஜோடி சேர்ந்த திரிஷா இந்தப் படத்தில் மீண்டும் இணைகிறாராம். மீண்டும் இணைகிறார் என்பதை விட " தலைவன் இருக்கின்றான்" படத்தில் நடிக்க ஓல் ரெடி புக்கிங் திரிஷாதான். இந்தப் படம் தாமதமானதால் தான் மன்மதன் அம்புவில் அசின் நடிப்பார் என எதிர்பார்க்கப் பட்ட நிலையிலும் அந்த வாய்ப்பு வாய்த்தது திரிஷாவுக்கு. இந்தப் படத்திற்கு முதலில் " தலைவன் இருக்கிறான்" என்றுதான் பெயர் வைத்திருக்கிறார்களாம். தமிழ் இலக்கண முறைப்படி தலைவன் இருக்கின்றான் என்பதே சரி என்பதால் அதையே வைத்துள்ளார் கமல்.




# சிம்பு,தனுஷ் திடீர் சந்திப்பு – மீண்டும் மோதலா!



கடந்த வியாழன் இரவு சென்னை சத்யம் திரையரங்கில் "சோஷியல் நெட்வேர்க்" என்ற ஆங்கிலப் படத்தின் பிரீமியர் காட்சியில் சினிமா பிரபலங்கள் பலரும் கலந்துகொண்டனர். இதில் அறிந்தோ அறியாமலோ தனுஷும் சிம்புவும் சந்தித்துக்கொண்டார்கள். தனுஷ் தன் மனைவி சௌந்தர்யாவுடன் வந்திருந்தார். சிம்புவும் வந்திருந்தார். சிம்புவையும் தனுஷையும் ஒன்றாக நிற்கவைத்து புகைப்படங்கள் எடுக்க திரையரங்கத்தின் வெளியே காத்திருந்தனர் பத்திரிகையாளர்கள்.

படத்தின் இடைவெளியின்போது இரண்டு பேருமே வெளியே வரவில்லை. படம் முடிந்து வெளியே வந்ததும் தனுஷும் சிம்புவும் " ஹாய்" சொல்லிக் கொண்டார்கள். அப்போது சௌந்தர்யா அருகில் இல்லை. தனுஷும் சிம்புவும் கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பின் இருவரும் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். இந்த சந்திப்பு பலருக்கும் ஆச்சரியமாய் இருந்தது.

எல்லா நடிகர்களைப் போலவும் இவர்களும் நண்பர்களாய் இருந்தவர்கள் தான் இப்போதும் 'இருப்பவர்கள் தான். தனுஷ் நடித்த "காதல் கொண்டேன்' படம் வெற்றி பெற்ற நேரம் சிம்பு நடித்த 'அலை' படம் படுதோல்வி. அப்போது வெடித்தது சண்டை.

தனது திரைப்படங்களில் தனுஷை தாக்கி வசனங்கள் பேசத் தொடங்கினார் சிம்பு. "மன்மதன்" படத்தில் யாரு முன்னாடி போறன்கிறது முக்கியம் இல்லை, "கடைசியில் யாரு ஜெயிக்கிறான்கிறதுதான் முக்கியம்" என்ற சிம்புவின் வசனம் அவர் ரசகிர்களிடத்தில் பெரும் கைதட்டலை வாங்கியது.

" தேவதையைக் கண்டேன்" படத்தில் தன் காதலுக்காக நீதிமன்றில் வழக்குப் போடுவார் தனுஷ். சிம்பு நடித்த "வல்லவன்" படத்தில் "நான் ஒன்னும் காதலுக்காக நீதிமன்றில் வழக்குப் போட மாட்டேன்னு" நக்கல் அடிப்பார் சிம்பு. இப்படி சிம்பு படங்களில் தனுஷை ஏகத்துக்கும் தாக்கிப்பேச, தனுஷோ "எனக்கு அரவிந்தசாமி மாதிரி கலர்தான் கொடுக்கல, அட்லீஸ்ட் அப்துல்கலாம் மாதிரி அறிவையாவது கொடுத்திருக்கலாமே" என்று பாவமாக வசனம் பேசுவார். சமீபமாக 'படிக்காதவன்' படத்தில் "என்ன மாதிரி பசங்கள பார்த்த உடனே பிடிக்காது, பாக்க பாக்க தான் பிடிக்கும்" என்று தன்னைத் தாழ்த்திக் கொண்டு வசனம் பேசுவார்.இதுபற்றி ஒருமுறை தனுஷிடம் நீங்கள் ஏன் எப்பவுமே ரொம்ப பாவமா உங்களைத் தாழ்த்திக் கொண்டு வசனம் பேசறீங்க என்று கேட்டதற்கு, என்னங்க நீங்க... நான் உண்மையைத் தானே சொல்றேன். நான் என்ன ஹிருத்திக் ரோஷன் மாதிரி கலர்க்லர் காஸ்ட்யூம் போட்டு டான்ஸாடாவா முடியும். ரொம்ப காமெடியா இருக்குமே!! என்று சொன்னார்.

சரி அதை விடுங்க சிம்பு தன்னுடைய படங்களில் உங்களை கலாய்கிறாரே அதுபற்றி உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லையா என்று கேட்டதற்கு, ஆனால் அது பற்றி நானே அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், நான் உங்களை திட்டினா, நீங்க என்னை திட்டுங்க. இதில் என்ன இருக்கு. அதத்தான் ரசிகர் கள் எதிர்பார்க்கிறார்கள். அப்போ தானே நாமும் வளர முடியும் என்று சென்னார். ஆனால் அதுமாதிரி ஒருவரை திட்டி நடிக்க எனக்கு மனசு வரலை என்று பதில் சொன்னார் தனுஷ்.

சரி இதெல்லாம் பழைய மேட்டர், சிம்புவும் தனுஷும் நடிக்க இப்போது வாய்ப்பிருக்கா? இருக்கலாம்... என்பதே பலரின் பதில். சமீபமாக தன் பேட்டியில் மனம் திறந்த சிம்பு. நான் பழைய சிம்பு இல்ல. எல்லா தலைக்கனத்யும் தூக்கிப்போட்டுட்டேன். இப்போது பரத்துடன்.சேர்ந்து வானம் படம் நடிக்கிறேன். வேறு ஹீரோக்கள் கூடவும் நடிக்க ஆசை இருக்கு. இந்த வயசில் தானே அப்படி நடிக்க முடியும் என்று சொன்னார். அப்போ... தனுஷுடன் நடிப்பீங்களா என்று கேட்க, நடிக்க நான் ரெடி, நீங்க கதை வச்சிருக்கீங்களா? என்றுகேட்டார் சிம்பு.

அப்போ தனுஷ், சிம்பு சேர்ந்து நடிக்க வாய்ப்பிருக்கு என்று தானே அர்த்தம். (ரஜினி கமல் இணைந்து நடிக்கப் போகிறார்கள் என்று பேசப்பட்டு வரும் நிலையில், தனுஷ் சிம்பு இணைவதையும் பேசிக்கொள்கிறது சில கூட்டம்) அதைவிட முக்கியமான மேட்டர் தனுஷ் நடிப்பில் 'ஆடுகளம்' இசை வெளியீடு முடிந்து ரீலிசுக்கு தயாராகி வருகிறது.சிம்பு நடித்த 'வானம்' இசை வெளியீடு விரைவில் நடக்க இருக்கும் நிலையில் ஆடுகளம், வானம் இரண்டும் ஒரே நாளில் ரிலீசாகும் என்று சொல்லப்படுகிறது.

அடடா...மீண்டும் மோதலா!!!

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யா திருப்பது கோழைத்தனமாகும்.

–கோன்பு தஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சட்டத்தை சரியான முறையில் அமுல்படுத்துவது அவசியம்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் தங்கியிருந்த சிங்கள மக்கள் இப்போது நாவற்குழியில் குடியேறியுள்ளனர். நாவற்குழியிலுள்ள அரச காணியில் அவர்கள் குடியேறியதாக கூறப்படுகின்றது.

நாவற்குழியில் அரச காணி இருப்பதாக அவர்கள் எப்படி அறிந்தார்கள். அந்த இடம் எப்படி அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இந்தக் கேள்விகளைக் கேட்பது நமக்கு அழகல்ல என்பதால் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால் சிங்கள மக்கள் குடியேறிய நாவற்குழி அரச காணியில் ஏற்கெனவே தமிழ் மக்கள் குடியிருந்துள்ளனர்.

இருந்தும் தென்மராட்சியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக அவர்கள் இடம்பெயரவேண்டியதாயிற்று. அவ்வாறு இடம்பெயர்ந்திருந்தாலும் தற்போது நிலவக்கூடிய சாதாரண சூழ்நிலையில், அங்கிருந்த மக்கள் மீளக் குடியமர்வுதற்காக சென்றுள்ளனர். இருந்தும் அப்பகுதி கிராம சேவையாளர் அதனைத் தடுத்துள்ளார்.

கிராமசேவையாளர் தடுப்பதற்கு உயரதிகாரிகளின் அறிவித்தல்கள் காரணமாக இருந்திருக்கலாம்.

எதுவாயினும் அரச காணியில் குடியிருந்த மக்கள் காணியற்றவர்கள் என்பது தெரிந்த விடயமே.

யுத்தம் காரணமாக அவர்கள் இடம்பெயர்ந்த நிலையில் மீண்டும் தாங்கள் இருந்த இடத்திலேயே அவர்கள் மீளவும் குடியமரமுடியும்.

இருந்தும் எங்கள் அதிகாரிகளின் வழமையான தடுத்துநிறுத்தும் பணியால் அந்த இடத்தில் இருந்த மக்கள் தங்கள் இடத்தை இழக்க வேண்டியதாயிற்று.

சட்டங்களின் பிரகாரமே, ஏற்கெனவே குடியிருந்த தமிழ் மக்கள் மீளக் குடியிருப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதெனத் தடுத்து நிறுத்திய அதிகாரிகள் கூறுவார்களாயின், நல்லது; அந்த சட்டத்தை இப்போதும் செய்யவேண்டுமல்லவா?

இந்த நாடு முழுவதற்கும் ஒரேசட்டம் என்றால் அதை நடைமுறைப்படுத்துவது உங்கள் கடமை.

அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றால் நீதிமன்றத்தை நாடி, நீதி கேட்கவேண்டும்.

உங்கள் பொறுப்பற்ற தன்மையால் ஏழை மக்கள் இன்று வீதியில் நிற்கும் அவலம். இதற்கு மேலாக இப்போது நாவற்குழியில் இருக்கக் கூடிய எஞ்சிய அரச காணியில் குடியமர தமிழ் மக்களும் துணிந்துவிட்டனர்.

நிலைமை இதுவாக இருக்கும்போது அதனை அதிகாரிகள் தடுக்க முற்பட்டால் சிலவேளை அவர்கள் தமது மரியாதையைக் குறைத்துக் கொள்ளவேண்டிய நிலையும் ஏற்படலாம். எனவே சட்டத்தை சரியானமுறையில்– பாகுபாடின்றி அமுல்படுத்த அனைவரும் முன்வர வேண்டும். அப்போதுதான் இன ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட முடியும்.

# தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டி வடக்கில் வெற்றிபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டிகள் கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் நேற்று சனிக்கிழமை வரை வெளியான போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதில் வெற்றியீட்டிய வட மாகாணப் பாடசாலைகளின் விபரம் வருமாறு;

5ம் பிரிவு: தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்– ப.கஜிதா யா/மீசாலை வீரசிங்கம் ம.வி 1 ஆம் இடம், 5ம் பிரிவு: இலக்கணப் போட்டி– ப.சிவ கௌரிநாயகி யா/யூனியன் கல்லூரி 3 ஆம் இடம், 5ம் பிரிவு : திறனாய்வுப் போட்டி– இ.சுயாந்தன் வ/புதுக்குளம் ம.வி 1 ஆம் இடம்,

4ம் பிரிவு: சிறுகதையாக்கம்– வி. திவாகரன் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி 2 ஆம் இடம். 5ம் பிரிவு: சிறுகதையாக்கம்– இ.பிரியங்கா யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 1 ஆம் இடம் 2 ம் பிரிவு: வாசிப்பு– ச.டிலக்ஷினி வ/றம்பைக்குளம் மகளிர் ம.வி 3ஆம் இடம்.

1ம் பிரிவு: ஆக்கத்திறன் வெளிப்பாடு– சி.நிறோஜன் யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் 3 ஆம் இடம். பிரிவு 1: பேச்சு– த.அபிநாத் யா/இந்து ஆரம்பப் பாடசாலை 1 ஆம் இடம், 5ம் பிரிவு: பேச்சு– க.வசீகரன் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி 1 ஆம் இடம். 1ம் பிரிவு :பாவோதல்– இ.கிருஷிகா மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி 1 ஆம் இடம்,

5ம் பிரிவு: பாவோதல்– செறின் சியாமா மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி 3 ஆம் இடம், பிரிவு 1: இசையும் அசைவும்– யோ.லஜனிகா வ/விபுலானந்தா கல்லூரி 3 ஆம் இடம், பிரிவு 4: இசை தனி– அ.சண்முகப்பிரியன் யா/யூனியன் கல்லூரி 3 ஆம் இடம், பிரிவு 5: இசைதனி– க.வர்ஜிகன் யா/செங்குந்தா இந்துக் கல்லூரி 1ஆம் இடம்,

பிரிவு 4: நடனம்– க.அபிநயா யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை 2ஆம் இடம், பிரிவு 5: நடனம்– ச.லாவண்யா யா/விக்டோரியாக் கல்லூரி 1ஆம் இடம்,

குழுப்போட்டிகள்

விவாதம்– யா/இந்துக் கல்லூரி 1 ஆம் இடம், தமிழறிவு வினாவிடைப் போட்டி– யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2ஆம் இடம் இசைக்குழு யா/இந்து மகளிர் கல்லூரி 2 ஆம் இடம். (சு)

## மகரஜோதி மண்டல விரத மகோற்சவ பெருவிழா

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தான வருடாந்த மகர ஜோதி மண்டல விரத மஹோற்சவ பெருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு விரத மாலை அணியும் ஹோமத்துடன் மண்டல விரதம் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 60 தினங்கள் மகரஜோதி வரை விஷேட அபிஷேகம், பூசைகள், படிப்பூசைகள், பஜனைகள் மற்றும் விசேட உற்சவங்கள் என்பன நடைபெறும்.

இதில் எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு சந்தன அலங்காரமும் 21 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு விபூதி அலங்காரம், அபிஷேகம் என்பனவும் 27 ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு வில்வ அர்ச்சனை, சாமிமார்கள் விளக்குப் பூசையும் தொடர்ந்து 28 ஆம் திகதி பி.ப 5 மணிக்கு சுவாமிமார்கள், அடியார்கள் நீராஞ்சனம் ஏற்றுதல், கற்பூர ஆழியும் என்பனவும் இடம் பெறும். (ஸ்ரீ)

## குருநகர் யாகப்பர் ஆலய தாக்குதலின் 17 ஆவது வருட நினைவு தினம்



(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது சுப்பர் சோனிக் போர் விமானம் கடந்த 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி குண்டு தாக்கு தலை மேற்கொண்டது. இச்சம்பவத்தின் 17 ஆவது வருட நினைவு தினத்தை குருநகர் மக்கள் நேற்று நினைவு கூர்ந் தனர்.

குறித்த சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்த துடன் 29 பேர் காயமடைந்தனர். இதன் ஞாபகார்த்தமாக கடந்த 2002 ஆம் ஆண்டு 9 ஆவது வருட நினைவு தினத்தில் நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆலயத்தை வணபிதா ஆர்.எம்.ஜி.நேசநாயகம் அடிகளார் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ–

# மாகாணசபைகளின் அதிகாரங்களை முடக்கும் முயற்சியில் அரசாங்கம்

## மாகாண முதலமைச்சர்கள் கடும் அதிருப்தி

மாகாண சபைகளின் அதிகாரங்களை முடக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைக்கும் வகையில் அண்மையில் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து மாகாண முதலமைச்சர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

சுற்று நிருபங்களை வெளியிடுவதற்கு முன்னரும் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னரும் தொடர்புடைய அமைச்சுக்களிடம் மாகாண சபை ஆலோசனை பெற்றுக் கொள்ளப் பட வேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்கள் வெகுவாக வரையறுக்கப்படும் என முதலமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து முதலமைச்சர்கள் அமர்வில் பேச்சுவார்ததை நடத்தப்படவுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளதுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் மாகாணசபை முதலமைச்சர்களுக்கான மாநாடு நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


சட்டங்களை அமுல்படுத்துவ தற்கோ அல்லது சுற்று நிருபங்களை வெளியிடுவதற்கோ முன்னர் உரிய அமைச்சுக்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் இந்தத் தீர்மானம் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு முரணான வகையில் காணப்படுவதாக மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சஞ்சீவ கவிரட்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர்களும் இந்தத் திட்டத்திற்கு எதிராக போராடுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

(ஸ்ரீ–2)

# எருசலேம் கோவிலின் அழிவு பற்றி முன்னறிவித்தல்



"நானே உங்களுக்கு நாவன்மையையும் ஞானத்தையும் கொடுப்பேன். நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்"

எருசலேம் கோவில் அழகைப் பற்றி மக்கள் பிரமித்து பேசிக்கொண்டிருந்தனர். இவற்றைக் கண்ணுற்ற இயேசு இவை எல்லாம் ஒன்றின் மேல் ஒன்று இராதவாறு கற்கள் இடிந்துவிழும் நிலையானது அல்ல நிலையற்றது என்று கூறுகிறார்.

கிறிஸ்து இயேசுவே எம் எல்லோருக்கும் நிலையான செல்வமாக உள்ளார்.

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவில் விசுவாசமும் பக்தியும் உடையவர்களாக மன உறுதியுடன் வாழ வேண்டும்.

இவ்வுலக செல்வங்கள் அனைத்தும் நிலையற்றவை. மறு உலகவாழ்வு என்று ஒன்று உண்டு. அவையே நிலையான வாழ்வாகும்.

நானே நாவன்மையும் ஞானத்தையும் கொடுப்பேன். மன உறு தியோடு இருங்கள். திகிலுற வேண்டாம் என்று இன்றைய நற்செய்தியில் கூறப்படுகின்றது.

## பரமபிதா காட்டிய பாதை

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் மன உறுதியோடும் விசுவாசத்தோடும் கிறிஸ்துவுக்கு உகர்ந்தவர்களாய் வாழ்ந்து கிறிஸ்துவுக்கு சான்று பகர வேண்டும்.

ஜோன் ரொபேர்ட்

# ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் விமான நிலையம் மீது தாக்குதல்

ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் விமான நிலையத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள ஜலாலாபாத் விமான நிலையத்தை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குறித்த விமான நிலையத்தின் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் 14 தற்கொலைக் குண்டுதாரிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களில் எட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பிரதேசம் பாரியளவு புகை மண்டலத்தினால் சூழப்பட்டிருப்பதனால் சரியான தரவுகள் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. விமான நிலையத்திற்கு ஏற்பட்ட சேத விபரமோ அல்லது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையோ இதுவரையில் சரியான முறையில் அறிவிக்கப்படவில்லை. (ஸ்ரீ)

# மரண தண்டனை இரத்து செய்ய இந்தியா, அமெரிக்கா எதிர்ப்பு

(நியூயோர்க்)

மரண தண்டனையை இரத்து செய்வது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா) தீர்மானத்தை எதிர்த்து இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட 38 நாடுகள் வாக்களித்துள்ளன. ஆனால், 107 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

கடுமையான குற்றம் புரிந்தவர்களுக்கு நீதிமன்றங்கள் மூலம் மரண தண்டனை வழங்கப்படுகிறது. இந்நிலையில் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் கோரி வருகின்றன. இதையடுத்து சில நாடுகள் மரண தண்டனையை ஒழித்து விட்டன. இது குறித்து ஒருமித்த கருத்து ஏற்படுத்த ஐ.நா. சபையும் முயன்று வருகிறது.

இதன் அடிப்படையில் மரண தண்டனையை இரத்து செய்வது தொடர்பான தீர்மானத்தின் மீது ஐ.நா. சபையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

107 நாடுகள் ஆதரித்தும் 38 நாடுகள் எதிர்த்தும் வாக்களித்துள்ளன. 36 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்தியா , சீனா , அமெரிக்கா , ஈரான் ,சவுதி அரேபியா ஆகியவை தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நாடுகளில் குறிப்பிடத்தக்கவை.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஐ.நா. பொது சபையில் இது போன்ற வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போது 104 நாடுகள் ஆதரித்தும் 54 நாடுகள் எதிர்த்தும் வாக்களிக்கப்பட்டன. 29 நாடுகள் கலந்து கொள்ளவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் மரண தண்டனையை இரத்து செய்வதற்கான ஆதரவு பெருகி இருப்பது தெரியவந்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு பெரும்பாலான நாடுகள் ஆதரவு தெரிவித்தாலும் அவர்களது கருத்தை மற்றைய நாடுகள் மீது திணிக்க முடியாது என இந்தியா உள்ளிட்ட நாடுகள் தெரிவித்துள்ளன.

குற்றவாளிகளை சட்டப்படி தண்டிப்பதற்கான உரிமை ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை மிகக் கடுமையான குற்றம் புரிகிறவர்களுக்கு மட்டுமே மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

இது மிகமிக அரிது. அதிலும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு மரண தண்டனை கொடுப்பதில்லை என இந்திய அதிகாரி அக்வினோ விமல் ஐ.நா. சபையில் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஒபாமாவின் மகளுக்கு வந்த பொதியால் பரபரப்பு

(சியோல்)


அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மகளுக்கு தென்கொரியாவை சேர்ந்த ஒருவர் அனுப்பிய பொதியால் ஜி-20 மாநாட்டில் பரபரப்பு ஏற்பட்டது.

தென்கொரிய தலைநகர் சியோலில் கடந்த இரண்டு நாட்களாக ஜி-20 நாடுகளின் ஐந்தாவது உச்சி மாநாடு நடந்தது. இதனால் அந்நகர் உச்சக்கட்ட பாதுகாப்பு வளையத்தில் இருந்து வருகிறது.

நேற்று முன்தினம் மாநாடு நடந்து கொண்டிருந்த போது சியோல் நகரின் தபால் அலுவலக ஊழியர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் இளைய மகள் சஷா பெயரில் வந்துள்ள ஒரு பொதி குறித்து பாதுகாப்பு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

இதனால் பரபரப்படைந்த பாதுகாப்பு பொலிஸார் அதை எக்ஸ்-ரே கதிர்கள் மூலம் சோதனையிட்டனர். அதில் பொதிக்குள் உருண்டை வடிவத்தில் பல பொருட்கள் இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து உஷாரான பொலிஸார் பொதிக்குள் வெடிகுண்டு இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தில் வெடி குண்டை செயலிழக்க செய்யும் நிபுணர்களை வரவழைத்து பொதியை பிரித்து சோதனையிட்டனர்.

அப்போது அதற்குள் பேரிக்காய்கள் வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. சியோல் நகரில் ஒரு பகுதியான புசன் என்ற பகுதியில் வசித்து வரும் 70 வயதான தாத்தா ஒருவர் தான் அதை அனுப்பி வைத்தார் என்பது விசாரணையில் தெரிய வந்தது. அந்தப் பொதி அவருக்கே திருப்பி அனுப்பப்பட்டது. (ஸ்ரீ)




# ஹெயிட்டியில் கொலராவுக்கு 800 பேர் பலி; 12 ஆயிரம் பேர் வைத்தியசாலைகளில் அனுமதி

(போர்ட் - ஒவ் - பிரின்ஸ்)

அமெரிக்கா அருகேயுள்ள ஹெயிட்டி நாட்டில் கடந்த ஜனவரி மாதம் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது.

இதில் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 750 பேர் உயிரிழந்துள்ளதுடன் 3 இலட்சத்து 572 பேர் காயம் அடைந்தனர்.

மேலும் 10 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர். அவர்கள் அனைவரும் தலைநகர் போர்ட் - ஒவ் - பிரின்ஸ் மற்றும் அதை சுற்றியுள்ள நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு அவர்கள் சுகாதார சீர்கேடான நிலையில் சுத்தமான குடிநீர் மற்றும் போதிய உணவு கிடைக்காமல் வாடுகின்றனர். இந்த நிலையில் சுகாதார சீர்கேடு காரணமாக அங்கு கொலரா மற்றும் வாந்திபேதி ஏற்பட்டுள்ளது.

அது தற்போது முகாம்களில் தங்கியுள்ள மக்களிடம் அதிவேகமாக பரவி வருகிறது. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் அங்குள்ள வைத்தியசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனால் வைத்தியசாலை நோயாளிகளினால் நிரம்பி வழிகின்றனர். தீவிர சிகிச்சை வழங்கவும் பலனின்றி கொலரா நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் நாளுக்கு நாள் உயிரிழக்கின்றனர்.

இதுவரை அங்கு கொலராவுக்கு 800 பேர் பலியாகி உள்ளதுடன் சிகிச்சை பெறுபவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. (ஸ்ரீ-2)



# சீனாவில் நாய்கள் வளர்ப்பதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது


(பீஜிங்)

உலகிலேயே அதிக மக்கள் தொகையில் சீனா முதல் இடத்தை வகித்து வருகிறது. இதனால் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க சீன அரசு கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு குழந்தை திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

நடைமுறையில் வெற்றி பெற்றாலும் பெரும்பாலான சீனர்கள் இதனை வெறுத்து வருகின்றனர்.

இந்நிலையில் வயதான நிலையில் உள்ள சீனர்கள் தங்களுக்கு துணையாக நாய்களை வளர்த்து வருகின்றனர். தற்போது இதற்கும் சீன அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. அதாவது ஒருவர் ஒருவீட்டிற்கு ஒரு நாய் மட்டுமே வளர்க்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இப்பகுதியில் 9 இலட்சம் செல்லப் பிராணிகள் வளர்ப்பதற்கு பதிவு செய்துள்ளனர் என கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)




ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு ஜப்பானின் யோகோஹமா மாகாணத்தில் ஆரம்பமாகியது. இதில் கலந்து கொள்ள வந்த கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர், அவரது மனைவி ஆகியோர் யோகோஹமா விமான நிலையத்தில் வந்திறங்கியதை படத்தில் காணலாம்.

# அவுஸ்திரேலியாவில் இந்துக் கோயில் மீது மர்மநபர்கள் தாக்குதல்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் இந்து கோயில் மீது மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இந்து கோயில் ஒன்று உள்ளது. கடந்த 11 ஆம் திகதி மர்ம நபர்கள் இரும்பு , தடிகளுடன் நுழைந்து கண்ணாடி மற்றும் ஜன்னல்களை சேதப்படுத்தி தப்பியோடி விட்டனர்.

மேலும் அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஒரு வயது குழந்தையும் இந்தத் தாக்குதலில் காயமடைந்து உயிர்தப்பியுள்ளது.


இது குறித்து கோயில் அர்ச்சகர் தெரிவிக்கையில், இதேபோன்று கடந்த ஓகஸ்ட் மாதம் 6 பேர் கொண்ட கும்பல் கோயில் வளாகத்திற்குள் முட்டையினை வீசி எறிந்ததுடன் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கோயில் வளாகத்தில் வைக் கப்பட்டுள்ள இரகசிய கமராவில் பதிவாகி யுள்ளது. இது குறித்து பொலிஸ் புகார் செய் தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# விமான ஓடுபாதையால் இரணைமடுக் குளத்துக்கு ஆபத்து

எம்.கணபதிப்பிள்ளை
பிரதி அதிபர்
றோயல் கல்லூரி
கொழும்பு



கிளிநொச்சியிலுள்ள, முரசுமோட்டை, பரந்தன், தர்மபுரம், பெரியகுளம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், பரவைப்பாஞ்சான், தட்டுவன் கொட்டி, ஆனையிறவு, திருவையாறு, மூன்றாம் வாய்க்கால், நான்காம் வாய்க்கால், உருத்திரபுரம் போன்ற பல குடியிருப்புக்கள் இரணைமடுக்குளத்தை நம்பியே குடியேற்றத் திட்டங்களாக கொடுக்கப்பட்டது.

1953 ஆம் ஆண்டைத் தொடர்ந்து, தமது சொந்தக் கிராமங்களை விட்டு யாழ்ப்பாணத்தின் 13 D.R.O பிரிவுகளில் இருந்து வந்த மக்கள் கிளிநொச்சி காட்டுப்பிரதேசத்தை காடழித்து களனியாக்கினர். மலேரியா போன்ற நோய்களில் இருந்தும், விசகடி, யானைகளின் அச்சுறுத்தல் போன்ற அசாதாரண நிலைகளிலிலிருந்தும் தம் உயிரைப் பணயம் வைத்து எம்மூத்த தலைமுறையினர் இப்பிரதேசங்களை நாடாக்கினர். அவர்களின் அயராத உழைப்பினாலும், அர்ப்பணிப்பான சேவையினாலும், தம் எதிர்காலம் நோக்கிய கனவுகளினாலும், இன்று அப்பிரதேசம் வளர்ச்சி கண்ட பூமியாக காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்திற்கு நீர்ப்பாசன ஊட்டம் தந்து அப்பிரதேசத்தை பசுமைப் பிதேசமாக்கிய பாரிய பணியில் இரணைமடுக்குளம் முன்னிலை வகிக்கின்றது.

இரணைமடுக் குளத்திற்கு அண்மையில் ஒரு பாரிய விமான ஓடுபாதை உருவாக்கப் படுவதாகவும் இலங்கையில் மூன்றாவது பெரிய விமானநிலையமாக அது உருவாக்கப்படும் எனவும் இலத்திரனியல், பத்திரிகை ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இரணைமடுக் குளத்தில் அணைக்கட்டு ஏலவே பாதிப்புக்குள்ளானதாகவே காணப்படுகின்றது. பொருத்தமற்ற போக்குவரத்து நடவடிக்கைகளாலும், யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாப் பிரயாணிகளாலும் இவ் அணைக் கட்டு படிப்படியாகச் சேதமடைந்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது. இந்நிலையில் பாரிய அதிர்வுச் சக்திகளை கொண்ட விமானங்கள் இரணைமடுக்குளத்திற்கு அண்மையில் வந்திறங்குமானால் இரணைமடுக்குளத்தில் அணைக்கட்டு முற்றாக சேதமடையும் என்பதில் ஐயமில்லை.

எனவே கட்சி, கருத்துப் பேதங்களுக்கு அப்பால், உண்மை நிலையை உணர்ந்து விமான ஓடுபாதை, விமான நிலையம் ஏற்படுதலுக்கு எதிராக எல்லோரும் குரல் கொடுக்க வேண்டும் என வேண்டுகின்றோம். இல்லையேல் கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்தக் குடியேற்றங்களின் 2/3 பகுதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பு நீர்ப்பாசனமற்று பயிர்ச்செய்கைக்குள்ளாகாமல் வறண்டு பாலைவனமாகப் போகும் வாய்ப்புள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் பாவித்த சிறிதொரு விமான ஓடுபாதை ஓரளவு இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டுக்கு பாரிய அதிர்வைத் தந்திருந்தது. அந் ஓடுபாதையை பெருப்பிக்கவேண்டும். அங்கு ஒரு பாரிய விமான நிலைய ஓடுபாதையை அமைக்கவேண்டும் என்று போட்டியடிப்படையில் சிந்திக்காது அயலில் அரை நூற்றாண்டுக்கு மேலாக வாழும் மக்கள் குளத்து நீர், அணைக்கட்டு என்பவற்றை பற்றி சிந்தித்து தீர்மானம் எடுத்து செயற்படுதல் பொருத்தமானதாக இருக்கும்.

இந்தக் கருத்து ஒரு கட்சியினுடையதோ, ஒரு குழுவினுடையதோ அல்ல. இப்பிரதேசத்தினுடைய கல்வி, பொருளாதார, சமூக, அபிவிருத்தியோடு தொடர்பான அப்பிரதேச மக்களின் கோரிக்கை. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும், கௌரவ ஜனாதிபதியும் இக்கோரிக்கையில் அக்கறையெடுத்து இந்நடவடிக்கையை தடுத்து நிறுத்தி இரணைமடுக் குளத்தையும் அதன் அணைக்கட்டையும் மேலும் வலுவுள்ளதாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும் என்று வேண்டுகின்றோம்.

தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கைகளால் தோற்றுப்போனவர்கள் நாங்கள். ஆகக்குறைந்த பட்சம் எங்கள் இருப்புக்களையும், எங்கள் வளங்களையும், எங்கள் சூழலையும் பொருத்தப்பாடுடன் வைத்திருப்பதற்கு முயற்சியுங்கள். நாளைய சந்ததி அதற்காக நன்றியுடன் இருக்கும்.

# சரணடைந்த புலி உறுப்பி...

ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு நேற்று கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவு மக்களின் சாட்சிகளை நெல்லியடி கலாசார மண்டபத்தில் பதிவு செய்தது.

இதன்போது சாட்சியமளித்த உதயபாஸ்கரன் பத்சலா என்ற தாயார் தெரிவிக்கையில்,

எனது மகள் உதயபாஸ்கரன் நிரோயினி (வயது 17) விடுதலைப்புலிகள் பிடித்துச் சென்று தமது அமைப்பில் உறுப்பினராக வைத்திருந்தனர்.

நான் இறுதியாக எனது மகளை 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி சந்தித்தேன்.

அதற்குப் பின் நான் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டேன்.

பின்னர் எனது மகள் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்ததை அவருடன் கல்வி கற்ற நண்பியொருவர் என்னிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றில் முறைப்பாடு செய்தும் மகள் தொடர்பில் எதுவித தகவல்களுமில்லை.

அத்துடன் முன்னாள் போராளிகள் தடுத்துவ்வக்கப்பட்டுள்ள அனைத்து முகாம்களுக்கும் சென்று பார்த்தபோது அங்கேயும் எனது மகள் இல்லை.

ஆனால் எனதுமகள் உயிருடன் உள்ளார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எனவே இராணுவம் இரகசியத் தடுப்பு முகாமில் எனது மகளை தடுத்துவைத்துள்ளது என கண்ணீருடன் தெரிவித்தார்.

**காயமடைந்திருந்த மகன் இராணுவத்தினரிடம் உள்ளார்**

இந்த விசாரணையின் போது சாட்சியமளித்த பருத்தித்துறையைச் சேர்ந்த வல்புரன் மார்க்கண்டு தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடம் கணிதத்துறையில் படிப்பை மேற்கொண்டு வந்த எனது மகன் மயூரன் பல்கலைக்கழகப் பகிஷ்கரிப்பினால் வீட்டில் தங்கியிருந்தார்.

2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி நானும் மனைவியும் ஏனைய 05 பிள்ளைகளும் கோயிலுக்குச் சென்றபோது மயூரன் மட்டும் வீட்டில் இருந்தார். எனினும் பிற்பகல் வீட்டுக்கு வந்து பார்த்தபோது மயூரன் வீட்டிலில்லை. ஆனால் வீட்டு வாசலில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வந்துசென்ற அடையாளத்தைக் கண்டு சந்தேகமடைந்த நான் உடனடியாகவே பொலிஸில் முறைப்பாடு செய்தேன்.

முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட பொலிஸார் உடனடியாகவே முகமாலைப் பொலிஸாரிடம் கேட்டபோது அதே தினம் 3.20 மணிக்கு மார்க்கண்டு மயூரன் என்பவர் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரிக்கு செல்லக் குறிப்பிட்டு முகமாலை சோதனைச் சாவடியைத் தாண்டி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது தெரியவந்தது.

பின்னர் 6 மாதங்களின் பின் வன்னியிலிருந்து இணையத்தளத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட மகன் விடுதலைப்புலிகள் அமைப்பில் மீளமுடியாத நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.

பின்னர் அவரைப் பார்ப்பதற்கு பல முயற்சிகள் எடுத்தும் முடியாமற் போனது.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி இணையத்தள தொலைபேசி மூலம் வேறொருவர் அழைத்து மயூரன் காயமடைந்து விட்டதாகத் தகவல்தந்தார்.

இதனைத் தொடர்ந்து போர் நிறைவடைந்த நிலையில் நான் வெலிக்கந்த, பொலநறுவை, ஓமந்தை என விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்கள் மற்றும் செட்டிக்குளம் நலன்புரி முகாம் என அனைத்திலும் தேடியும் மயூரன் இல்லை.

ஆனால் கடந்த யூன் மாதம் குருநாகல் வைத்தியசாலையில் வைத்து மகனை சந்தித்ததாக ஒருவர் தெரிவித்ததைத் தொடர்ந்து நான் அங்கு சென்றேன்.

ஆனால் மயூரன் என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்த ஒருவர் குருநாகல் வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்திய சாலைக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டமை தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து வவுனியா வைத்தியசாலைக்குச் சென்றும் அங்கு எனது மகன் இல்லை. எனவே எனது மகனின் தகவலைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன் என தந்தையார் கண்ணீர் மல்க சாட்சியமளித்தார்.

**இராணுவம் தூக்கிச் சென்ற எனது கணவரை மீட்டுத்தாருங்கள்**

இவ் விசாரணையில் திருமதி ரஞ்சிதன் சாட்சியமளிக்கையில்,

வன்னி இறுதி யுத்தத்தின்போது ஷெல் வீச்சில் காயமடைந்த எனது கணவரான இரட்ணம் ரஞ்சிதனே இராணுவக் கட்டுப்பாட்டிற்கு வரும்போது என்னால் அழைத்து வரமுடியவில்லை.

எனது பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக அவரை அங்கேயே விட்டு நான் இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டேன்.

நான் வவுனியா வலயம் 4 முகாமில் தங்கியிருந்தேன் எனினும்

முள்ளிவாய்க்காலில் காயமடைந்திருந்த எனது கணவரை 2009 ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி இராணுவத்தினர் தூக்கிச் சென்றதாக கண்டவர்கள் கூறினார்கள்.

ஆனால் அவர் தொடர்பில் எந்தத் தகவலும் அதற்குப்பின் எனக்குக் கிடைக்கவில்லை.

அத்துடன் எனது சகோதரனும் அவரது மனைவியும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த நிலையில் அவர்களது 3 பிள்ளைகளையும் என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்தனர்.

தற்போது சகோதரனும் அவரது மனைவியினதும் தகவல் ஏதுமில்லாத நிலையில் பிள்ளைகள் என்னிடம் உள்ளனர் எனத் தெரிவித்தார்.

**கொழும்பில் வைத்து**

**எனது கணவரை இராணுவம் கடத்தியது**

இவ் விசாரணையில் சாட்சியமளித்த கரணவாயைச் சேர்ந்த திருமதி பிரேமசிறி சுதர்சினி,

2006 ஆம் ஆண்டு யூலை 3 ஆம் திகதி கொழும்புக்கு சென்ற எனது கணவர் செல்லையா பிரேமசிறியை காணவில்லை.

கொழும்பில் புதிய செட்டித்தெருவில் விடுதியொன்றில் வெளிநாடு செல்வதற்காக தங்கியிருந்த எனது கணவரை 2006 ஆம் ஆண்டு 3 ஆம் திகதி சீருடையில் வந்த இராணுவத்தினர் கடத்திச் சென்றனர் என அவர் தெரிவித்தார்.

**கருணா குழுவினர் எனது கணவரை கடத்தினர்**

இவ்விசாரணையில் சாட்சியமளித்த திருமதி பாலகுமார்,

2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி கொழும்பு சென்ற எனது கணவர் செல்வராசா பாலகுமார் கொழும்பில் தங்கியிருந்த வேளை கருணா குழுவினரால் கடத்தப்பட்டார்.

இக்கடத்தலில் கருணா குழுவைச் சேர்ந்த குணபாலசிங்கம் ஜிதைஸ் தலைமையில் 10 பேர் கொண்ட ஆயுதக் குழுவினரே கடத்திச் சென்றனர் என திருமதி பாலகுமார் சாட்சியமளித்த வேளை இரகசியமாக உங்கள் சாட்சியத்தைப் பதிவுசெய்து கொள்கிறோம் என ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். இவற்றை செவிமடுத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா, பதிவுசெய்யப்பட்ட மற்றும் இரகசிய இராணுவ முகாம்கள் குறித்து விசாரணை செய்வதாக உறுதியளித்தார். (ச–5)

# வீடுகளை பார்...

கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கேள்வியெழுப்பினார்கள்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றுக் காலை வடமராட்சி கிழக்கு குடத்தனையில் நடைபெற்றது.

இதன்போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சாட்சியமளிக்க வந்த மக்களிடம் பிரச்சினைகளை கேட்டறிந்தனர்.

இதில் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த மக்கள் தற்போது இடைத்தங்கல் முகாமில் உள்ள தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறினர்.

இதில் விடுதலைப்புலிகளிடமிருந்து இராணுவத்தினர் வெற்றிலைக்கேணியை மீட்டெடுக்கும்வரை நாங்கள் எமது வீடுகளில் தங்கியிருந்தோம்.

எனவே அப்பகுதியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பது ஏற்றுக்கொள்ளமுடியாது. அத்துடன் அண்மையில் எமது வீடுகளைச் சென்று பார்வையிடவும் ஆலயங்களுக்குச் சென்று வழிபடவும் இராணுவத்தினர் அனுமதி வழங்கினர்.

எனவே கண்ணிவெடிகள் இருந்தால் இராணுவத்தினர் அனுமதி வழங்குவார்களா? என ஆணைக்குழு உறுப்பினர்களிடம் மக்கள் கேள்வியெழுப்பினர். இதற்குப்பதிலளித்த ஆணைக்குழு உறுப்பினர்கள், இது தொடர்பில் யாழ். அரச அதிபரிடம் கலந்துரையாடி விரைவில் தீர்க்கமான முடிவை பெற்றுத்தருவோம் என்றனர். அத்துடன் இவ்விசாரணையின் போது சாட்சியமளித்த திருமதி கமலேஸ்வரி, எனது கணவர் தவக்குமார் பத்மநாதன் விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தார். அவரின் இயக்கப் பெயர் விமல் மாஸ்ட்டர்.

எனது கணவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்தபோது யுத்த காலத்தில் கால் ஒன்றையிழந்தார். அதன் பின் களப்பயிற்சி வழங்குபவராக அந்த அமைப்பில் இருந்தார். வன்னி இறுதி யுத்தம் முடிவடைந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினரிடம் சரணடைந்தார். எனினும் அதன் பின் அவர் தொடர்பில் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை. எனவே எனது கணவரை மீட்டுத்தாருங்கள் என தனது குழந்தையுடன் கண்ணீர் மல்க சாட்சியமளித்தார். (ச–5)

**YOGI'S** (Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)

மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 4 நாட்கள் மட்டும், 20.11.2010 ஆரம்பமாகின்றது.

காலை 10 மணிமுதல் 3 மணிவரை.

6 விதமான கேக் கலவைகள்

6 விதமான Sweets வகைகள்

6 விதமான Short Eats வகைகள்

வித்தியாசமான Rice வகைகளும் Dish வகைகளும்.

வகுப்புக்களில் சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

Phone
021 222 2796
021 321 0077
0777164923

75, அம்மன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C-1623)



**City Medicals**

## முக்கிய அறிவித்தல்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு,

இல. 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக) அமைந்திருக்கும் சிற்றி மெடிக்கல்ஸ் ஸ்தாபனம் தனக்கென கிளை ஸ்தாபனங்கள் எதையும் யாழ்ப்பாணத்திலோ அல்லது இலங்கையில் வேறெந்தப் பிரதேசங்களிலோ கொண்டிருக்கவில்லை, என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புவதோடு எமது ஸ்தாபனம் போன்ற பெயர்களையுடைய ஏனைய ஸ்தாபனங்களுக்கும் எமக்கும் இடையில் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. ஆகையால் அத்தகைய ஸ்தாபனங்களை சிற்றி மெடிக்கல்ஸ் எனக் கருத வேண்டாம்.

நிர்வாகம்,
சிற்றி மெடிக்கல்ஸ்

(2867)



## வருட இறுதியை முன்னிட்டு விசேட தள்ளுபடி விற்பனை

அனைத்து வகையான மெடிக்கல் புத்தகங்கள், நேசிங் புத்தகங்கள் (JAPEE வெளியீடுகள்), சரித்திர நாவல்கள், குறுநாவல்கள், ஆங்கில இலக்கண இலக்கிய புத்தகங்கள், பாட புத்தகங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுபொருட்கள், ஸ்ரேஷனரி பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 5542

(C-1622)



**COLOMBO HIGHER EDUCATIONAL CONSULTANCY**

CHEC



- குறைந்த கல்லூரி அனுமதிக் கட்டணங்கள் [1500-2000 பவுண்ட்ஸ்]
- மிகக் குறைந்த கட்டணக் கழிவின் ஏற்பாட்டில் Sponsor உதவிகள்
- விசா பெற்றுக் கொள்ள முன்னர் எதுவிதமான அனுமதிக் கட்டணங்களும் பெற்றுக்கொள்ளாமல்
- நீங்கள் விரும்பிய Degree ஐ UK இல் தொடரலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

January Intake Started

**FREE SEMINAR AND SPOT ADMISSION IN SRILANKA**

UK இல் A தரத்தைப் பெற்று சாதனை படைக்கும் Sponsor College
CITY COMMUNITY COLLEGE
எதிர்வரும் 20.11.2010 அன்று முதல்தடவையாக Renuka City Hotel Colombo -03 இல் 10.00 am - 2.00pm வரை மாணவர்களை நேரடியாக சந்திக்க வருகிறார்கள் என்பதை தெரிவிக்கின்றோம்.
நீங்கள் நேரடியாக கல்லூரி அதிபர் Ms.Florence Mckay ஐ சந்திக்கக்கூடிய அரிய சந்தர்ப்பம் - நழுவ விடாதீர்கள்.

CHEC
No. 51, Dharmapala Mawatha,
Colombo - 07
Office : 0117549600

தொடர்புகளிற்கு :
Sisil 0779265447 (Jaffna)
Haris 0773858916 (Colombo)
Hameed 0718236915 (Colombo)

(2866)


# இம்முறை வரவு செல...

பிரசாரங்கள் அனைத்தும் தற்போது முழுமையாக கைவிடப்பட்டுள்ளன.

சம்பள அதிகரிப்புக்கு சாமந்தரமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அனைத்தும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. பால்மாவின் விலை எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கப்படவுள்ளது.

சம்பள அதிகரிப்பிற்கான பணத்தை வரி அதிகரிப்பின்மூலம் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சர்கள் மட்டத்திலிருந்து ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் போக்குவரத்து, எரிபொருள் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன.

மேலும் இதுவரை காலமும் வழங்கப்பட்ட பல மானியங்களில் வெட்டு விழ இருப்பதுடன் அதன் காரணமாக பொதுமக்கள்மத்தியிலிருந்து கிளம்பும் எதிர்ப்பை சமாளிக்கும் வண்ணம் ஏழைகளுக்கு மண்ணெண்ணெய் மானிய அட்டை வழங்கப்படவுள்ளது.

சமுர்த்தி பயனாளர்கள், வருமானம் குறைந்தவர்கள் மற்றும் குறைவாக மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கென புதிய மின் கட்டண முறையொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் வரவு-செலவுத் திட்டத்தை தமிழுக்கு மொழிபெயர்ப்பதில் முக்கிய பங்காற்றிய அஷ்ரப் அலி தெரிவித்துள்ளார். (ச-5)


சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சிநெறி
அதிபர், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள்
பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள்
50% கட்டணத்துடன் பயிற்சியில் சேர
இன்றும் நாளையும் கடைசிநாள்
MyWay English 182, Stanley Rd Jaffna 0773363456


## சூசையின் சகோதரன் நேற்று சாட்சியம்

எனது மகன் மற்றும் மனைவி ஆகியோர் உயிருடன் இருக்கின்றனர். அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் தளபதி சூசையின் மூத்த சகோதரன் தில்லையம்பலம் தவராசா கேட்டுள்ளார்.

கற்றிருந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக் குழுவின் அமர்வு நெல்லியடி முருகையன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது இதன்போதே அவர் மேற்கண்டவாறு கேட்டார். (ச-5)

## இராணு...

நானும் எனது தாயாரும் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அங்கு வந்த இராணுவத்தினர் அம்மாவை சிகிச்சைக்காக அழைத்துச்சென்றனர். அதன்பின் அவரைக் காணவில்லை.

எனது அம்மா உள்ளூராட்சி திணைக்களத்தில் பணியாற்றியவர். நான் தற்பொழுது பெரியம்மாவுடன் வசித்து வருகின்றேன் என சிறுமி கூறினார். (ச-5)

## ஆங்...

1999 ஆம் ஆண்டு அவரின் கணவர் பிரிட்டனில் இறந்தபோது இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்கு ஆங்சான்சுகி அனுமதிக்கப்படவில்லை.

1991ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு ஆங் சான் சுகிக்கு வழங்கப்பட்டது.

ஆங் சான் சுகியை விடுதலை செய்ய வேண்டும் என மியன்மார் அரசாங்கத்தை உலக நாடுகள் பலவும் வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நாவற்...

பிடித்துக் கொண்டனர். இதனால் சிறுதி நேரம் பதற்றம் நிலவியது.

எனினும் சிங்கள மக்கள் பிடித்த நிலப்பரப்புக்களை தவிர மற்றைய நிலங்களை யாழ். வாசிகள் பிடித்துக் கொண்டனர்.

இதேவேளை இக் காணிகளில் குடியமர எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. என அப்பகுதி கிராம சேவையாளர் தெரிவித்தார்.

தற்போது சுமார் 50 குடிசைகளை சிங்கள மக்கள் அமைத்துக் கொண்டுள்ளதுடன் 50ற்கும் மேற்பட்ட வீடுகளுக்கான இங்களை யாழ்ப்பாண மக்கள் அமைத்துள்ளனர். (ச)


## உடனடியே...

- IELTS
- Spoken english

ஆரம்பமாகிறது 20 / 11 / 2010

- குறைந்த கட்டணம்
- பல்கலைக்கழக ஆசிரியர் குழு
- பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வேறு மாணவர்களுக்குமான தனி வகுப்புகள்
- பயிற்சிநெறி முடிவில் விரும்பியோருக்கு வெளிநாட்டு பல்கலைக்கழக அனுமதி

14-ம் திகதியில் இருந்து அனுமதி வழங்கப்படும் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு: (2868)

**European College of higher Studies**
315 1/2, Parameshwara Junction,Palaly Road,Jaffna.
Tel.No.: 0771882507 , 0213734747



ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்

## பொதுக்கூட்ட அறிவித்தல் 2010/2011

மேற்படி பொதுக்கூட்டம் 28.11.2010 (ஞாயிற்றுகிழமை) அன்று நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பெற்றுள்ளது. அங்கத்தவர்கள் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 23.11.2010ற்கு முன்னர் கீழ்வரும் முகவரியில் சமர்ப்பிக்கவும். மேலும் தங்களுக்கு கூட்ட அறிவித்தல் அனுப்ப வசதியாக தங்களது விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அல்லது முகவரிக்கு தபால் மூலமாக அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொ.பே.இல : 0777738484 உப தலைவர்
0774972020 செயலாளர்

செயலாளர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,யாழ்ப்பாணம்.

இல.207, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

(2862)



**CALL SERVICE**
T.P : 021-222 4459, 0774192275

Computer,(Laptop, Desktop) Mobile Phone, TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்கள் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.

**கணனி வகுப்புகள்**
T.P : 021-222 4459, 0774192275

*MS Office, DTP, Hardware Technology, Internet & E-Mail, Visual Basic,* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும், *(Personal & Group Classes)* பரீட்சை முடிவின் பின்னர் பெறுமதியான சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம். தொழில் புரிபவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு விஷேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. *(DURATION 01, MONTH)*

**STR COMPUTER SYSTEM**
384, NAVALAR ROAD, NALLUR, JAFFNA.



## கேபிள் TV இயக்குனர்களுக்கான கலந்துரையாடல்

யாழ் மாவட்ட கேபிள் T.V இயக்குனர்களுக்கான அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அனைத்து கேபிள் T.V இயக்குனர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

காலம் : 14.11.2010 (ஞயிற்றுக்கிழமை)
நேரம் : 11 மணி காலை
இடம் : யாழ் தொழில்நுட்ப நிறுவனம் (JTI)
இல. 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P No. : 0777710785
0777917790

(2864)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.